# இஸ்லாம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் - 7

**(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

இஸ்லாம்

தரம் 7
ஆசிரியர் வழிகாட்டி

முதலாம் பதிப்பு **2015**

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN :

சமயங்கள், விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

**ஸ்ரீலங்கா**

இணையத் தளம் : www.nie.lk
மின்னஞ்சல் info@nie.lk

பதிப்பு :
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016 ஆம் ஆண்டில் தரம் 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## வளப்பங்களிப்பு/ கலைத்திட்டக் குழு

**வழிகாட்டலும் அனுமதியும்**

**கல்வி சார் அலுவல்கள் சபை**
**தேசிய கல்வி நிறுவகம்**

**இணைப்பாக்கம்**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
விரிவுரையாளர்
சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

**விடய ஆலோசனை**

**கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி**
பணிப்பாளர்
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத்**
பிரதிப் பணிப்பாளர்
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**மௌலவி ஏ.எல்.எம். அலியார்**
பிரதிநிதி, கல்விக் குழு,
அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா
பீடாதிபதி,
அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகளுக்கான பீடம்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**மௌலவி எம்.ரீ. இக்பால்**
ஆசிரிய ஆலோசகர் - இஸ்லாம்
கொழும்பு கல்வி வலயம்

**எழுத்தாளர் குழு**

**உள்ளக**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
தேசிய கல்வி நிறுவகம்

**வெளியக**

**எம்.எச்.எம். புஹாரி,**
ஆசிரிய ஆலோசகர்.

**எம்.எச்.எம். நாளிர்**
ஓய்வுபெற்ற ஆசிரியர்.

**எம்.எஸ்.எம். அனஸ்**
ஆசிரியர், அலுத்கம்வீதிய தேசிய பாடசாலை.

**எம்.எம்.பஸ்லுர் ரஹ்மான்**
ஆசிரியர், பாபுஸ்ஸலாம் மு. வி, நாம்புளுவ.

**எஸ்.ஏ.எம். றிஸ்வி**
ஆசிரியர், அல்ஹுதா மு. மகா வி, ரிதீகம.

**எம்.எப்.எம்.பாஹிம்**
ஆசிரிய ஆலோசகர், மினுவன்கொடை கல்வி வலயம்.

**எம்.எம்.முகர்ரம்**
பாபுஸ்ஸலாம் மு.வி, நாம்புலுவ.

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தும் செயன்முறையை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மறு சீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் மாணவர்களிடம் எதிர்பார்க்கும் அடைவு மட்டங்களையும் அதனை அடைந்து கொள்ளுவதற்கு பயன்படுத்தக்கூடிய செயன்முறையையும் இது விளக்குகிறது. மேலும் எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் குறித்து மதிப்பிடுவதற்கும் ஆசிரியருக்கு இது உதவுகிறது.

இந்த ஆசிரியர் வழிகாட்டி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை திட்டமிடும் பொறுப்பை முழுமையாக ஆசிரியரிடம் ஒப்படைக்கிறது. எனவே குறிக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்காக ஆசிரியர் பொருத்தமான கற்பித்தல் முறையொன்றைப் பயன்படுத்திக்கொள்ளுவதற்கான சுதந்திரத்தை இது வழங்குகின்றது.

இஸ்லாம் பாட கற்றல் கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடும்போது அறிவு, திறன் மாத்திரமன்றி மனவெழுச்சி சார் கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதை இலக்காகக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை இவ்வாசிரியர் வழிகாட்டி அதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் குறித்து வழிகாட்டுகின்றது.

அத்தோடு உரிய தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்ளுவதற்காக விடய உள்ளடக்கத்தை வழங்குவதற்கு தேவையான காலப்பகுதியை சுயாதீனமாக தீர்மானித்துக்கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தேர்ச்சி மட்டம் மற்றும் கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்தின் எல்லையை வரையறுத்துக்கொள்வது பாடத்தை திட்டமிட இலகுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கற்றல் - கற்பித்தலின் போது மாணவர்களின் தேடலை மேம்படுத்துவதற்காக குழு ரீதியான செயற்பாடுகள் உதவுகின்றன. இக்குழுச் செயற்பாடுகளுக்குத் தேவையான நூல்கள் மற்றும் ஏனைய வளங்களைப் பாடசாலைச் சூழலில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையினை ஏற்படுத்துவதனூடாக திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதை உறுதிப்படுத்த முடியும்.

இவ்வழிகாட்டி ஆசிரியருக்கான வழிகாட்டல் குறிப்புக்களை கொண்டுள்ளதே தவிர மாணவர்களுக்கான மேலதிக வாசிப்புக்கானதல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் என்ற தொடர்பை வலுப்படுத்தி மாணவர் செயற்பாட்டை வீட்டுச் சூழலுடன் இணைக்கும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கான வழிகாட்டலின் இறுதிப் பகுதியில் வீட்டுச் சூழலில் பின்தொடர் செயற்பாடு என்ற பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இது ஒரு பரீட்சார்த்த முயற்சியாகும். கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் பெற்றோரின் பரஸ்பர ஈடுபாடும் அனுபவப் பகிர்வும் பிள்ளைகளின் கற்றலை மேலும் வளப்படுத்தும் என நாம் நாம்புகிறோம். ஆனால் இப்பகுதி பிள்ளைகளுக்கு மேலதிக சுமையாக அமையாத வகையில் அமுல்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம். அத்தோடு பிரதேசத்தின் தன்மை, மாணவரின் அனுபவம், பெற்றோரின் ஈடுபாடு முதலான காரணிகளை முன்வைத்து இச்செயற்பாடுகளில் பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ளும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி மறுசீரமைப்பின் ஊடாக எதிர்பார்க்கப்படும் மற்றங்களை அடைந்து கொள்ளும் வகையில் மாணவரின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து கொள்ளும் வகையில் பயன்மிக்க கற்பித்தலின் ஊடாக சிறந்ததொரு எதிர்கால சந்ததியை உருவாக்குவதே எதிர்பார்ப்பாகும்.

செயற்றிட்டத் தலைவர்

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| • பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| • பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| • கலைத்திட்டக் குழு | v |
| • ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் | vi |
| அறிமுகம் | x |
| தேசிய இலக்குகள் | xi |
| அடிப்படைத் தேர்ச்சிகள் | xiii |
| பாடத்திட்டம் | xvi |
| கற்றல் கற்பித்தல் முறை | xx |
| பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | xxi |
| கணிப்பீடும் மதிப்பீடும் | xxii |
| • கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் | 1-73 |

## 7.1.0 அறிமுகம்

மனிதன் உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்றையும் உள்ளடக்கியவன். இவற்றுக்கிடையில் சமநிலை பேணப்படும்போதுதான், முழுமையான ஆளுமை விருத்தியடைய முடியும். இந்த நிலைப்பாட்டிலேயே இஸ்லாம் மனிதனின் ஆன்மீக, தார்மீக வாழ்வுக்கான வழிகாட்டல்களையும் போதனைகளையும் வழங்கியிருக்கின்றது.

இன்றைய உலகம், விஞ்ஞான தொழிநுட்ப சாதனங்களுக்கூடாக பெருவாரியான மாற்றங்களைக் கண்டு வருகின்றது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி உடல், அறிவு என்பவற்றை போஷிக்கும் அதேவேளை ஆன்மீகத்தை புறக்கணிக்கின்றது. ஆன்மீக வாழ்வு புறக்கணிக்கப்பட்டதன் காரணமாக மனித வாழ்வு அமைதியையும் மகிழ்வையும் இழந்து நிற்கின்றது.

கவலை, மன இறுக்கம், விரக்தி முதலான உளநோய்கள் மனிதனில் வேரூன்றி வருகின்றன. மனித விழுமியங்கள் புறக்கணிக்கப்பட்டதன் விளைவாக வாழ்வதற்கான உரிமைகூட கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. சிந்தனைக்கன்றி உணர்வுகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கியதன் காரணமாக வன்முறை, கட்டற்ற நுகர்வு, சுரண்டல், மோசடி முதலானவை இறைவனைப் புறக்கணித்த வாழ்வுமுறைக்கு மனிதனைத் தள்ளிவிட்டுள்ளன.

இந்நிலையை அவதானித்து வரும் சிந்தனையாளர்களும் கல்வியியலாளர்களும் ஆன்மீகத்தினதும் விழுமியங்களினதும் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர். ஆன்மீக வறுமைக்குட்பட்டிருக்கும் மனித சமுதாயத்தை விடுவிக்கின்ற பயிற்சியை வழங்கும் பெரும் பணியை சமய பாடத்திடமும் அதனை நடைமுறைப்படுத்தும் ஆசிரியர்களிடமும் எதிர்பார்க்கின்றனர்.

இந்தப் பின்னணியில் மனிதனின் தனிப்பட்ட, குடும்ப, சமூக, தேசிய வாழ்வு முறைகளில் சமயமும் அது சார்ந்த விழுமியங்களும் முக்கியத்துவம் பெற வேண்டிய தேவை எமது நாட்டிலும் உணரப்பட்டு வருகின்றது. நலிவுற்றிருக்கும் தார்மீக, ஆன்மீகப் பண்புகள், ஒழுக்க விழுமியங்கள் மீண்டும் வலுப்பெறுவதற்கான செயற்றிட்டங்களை வகுத்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை சமயத் தலைவர்கள் மட்டுமன்றி, கல்வியியலாளர்களும் உணர்த்தி வருகிறார்கள்.

வேகமாக மாறிவரும் உலகில் மானிடப் பெறுமானங்கள் தளர்ந்து விடாமல் பாதுகாப்பதற்கு கவர்ச்சிகரமான சமயப் போதனையும், ஆன்மீகப் பயிற்சியும் அவசர நடவடிக்கைகளாக விதந்துரைக்கப்படுகின்றன. எனவே, இஸ்லாம் பாடத்திற்கூடாகவும் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, தேர்ச்சி என்பன விருத்தி செய்யப்பட்டு அவை நடைமுறை வாழ்வில் பிணைந்து கொள்ளும் அளவிற்கு இஸ்லாம் பாடக் கற்றல் கற்பித்தல் செயன்முறை இடம்பெற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இஸ்லாம் நிலையானதும், காலத்தால் மாறாததுமாகும். இருப்பினும் காலத்துக்கு பொருத்தமான வகையில் ஷரீஆவை கற்பதற்கான உத்திகளையும் அணுகுமுறைகளையும் கையாள்வதனை அது தடுக்கவில்லை. எதிர்கால சந்ததியினர் இஸ்லாத்தினது தூதின் ஒளியில் பயணிப்பதற்கான பயிற்சியையும் அனுபவத்தையும் வழங்கும் வகையில் இஸ்லாம் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த உயர்ந்த இலட்சியத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எமது ஆசிரியர்களே பிரதான பங்குதாரர்களாவர். எனவே ஆசிரியர்கள் தமது பணியும் பங்களிப்பையும் விருத்திசெய்துகொள்வதற்காகத் தம்மைத் தயார்படுத்திச் செயற்படுவார்கள் என நம்புகிறோம்.

## 7.2.0 கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சிகளும்

2.0 Nj r pa , y f Ffs ;

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்கு தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போஷிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

***தேசிய கல்விச் சேவை ஆணைக்குழுவின் அறிக்கை (2003)***

## 7. 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்:**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை.

எழுத்தறிவு :கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு :பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்துதல். எண்ணுதல், கணித்தல், ஒழுங்குமுறையாக அளத்தல்.

சித்திர அறிவு :கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழில் நுட்பத் தகைமை:கணனி அறிவு கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் nj ho;Dl;gtpay; (ICT) பயன்படுத்துதல்.

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்:**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வு சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்:**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்.

**சமூகச் சூழல்** : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும்சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

**உயிரியல் சூழல்** : வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரினத் தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதீகச் சூழல்** : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருட்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வு, நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்:**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்:**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும், விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும், உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்:**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுனர் போட்டிகள், ஓய்வு நேர பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மன எழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**(vii) கற்றலுக்குக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்:**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்துக்கு ஏற்ப இயங்கவும், அதனை முகாமை செய்யவும், வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## 7.3.0 - 7 ஆந் தர இஸ்லாம் பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. **அர்கானுல் ஈமான்**

   ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.

2. **அர்கானுல் இஸ்லாம்**

   இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.

3. **அல்அஹ்லாக் வத்தஸ்கிய்யா**

   இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையோருக்கும் வழி காட்டுவார்.

4. **அல்குர்ஆன் வஸ்ஸுன்னா**

   இஸ்லாத்தின் மூலாதாரங்களை அறிந்து, அவற்றின் போதனைகளை வாழ்வில் நடைமுறைப்படுத்துவார்.

5. **அஸ்ஸீறா வத்தாரீஹ்**

   நபி (ஸல்) அவர்களதும் குலபாஉர் ராஷிதீன்களதும் வாழ்க்கை முறையை விளங்குவதோடு இலங்கை முஸஸ்லிம்களின் வரலாற்றையும் அவர்களின் தேசிய பங்களிப்புகளையும் விரிவாக விளங்கி மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவார்.

6. **அல்முஆமலாத்**

   பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.

7. **அல்மபாஹீமுல் இஸ்லாமிய்யா**

   ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.

# பாட உள்ளடக்கம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **1.0**<br>**அர்கானுல் ஈமான்**<br><br>ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார் | 1.1.<br><br>ஈமான் பற்றிய அடிப்படைகளை அறிந்து கூறுவார். | • ஈமான் கொள்ள வேண்டிய அம்சங்கள் (தவ்ஹீத், றிஸாலத், மஆத்) | • ஈமான் ஒரு முஸ்லிமினது வாழ்வின் அடிப்படை என்பதை ஏற்று ஒழுகுவார்.<br>• ஈமானின் வகைகளை வகைப்படுத்திக் கூறுவார்.<br>• தௌஹீதின் பிரதான உள்ளடக்கங்களை விளக்கி எழுதுவார்.<br>• ஈமானின் ஆறு அம்சங்களுக்கும் குர்ஆன் ஸுன்னா ஆதாரங்களைத் தேடி முன்வைப்பார். | 02 |
| | 1.2.<br><br>அல்லாஹ் வணக்கத்துக்குரியவன் என்பதை விளக்கிக் கூறுவார் | • அல்லாஹ் வணக்கத்துக்குரியவன் | • வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே என்பதை உறுதியாக நம்பி ஒழுகுவார்.<br>• அல்லாஹ் ஒருவனையே வணங்கி வருவார்.<br>• அல்லாஹ்விடம் மாத்திரமே பிரார்த்தனைகளை முன்வைப்பார்.<br>• அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று பின்பற்றி நடப்பார். | 02 |
| | 1.3.<br><br>அல்லாஹ்வின் பண்புகளை அறிந்து கூறுவார். | • அல்லாஹ்வின் ஸிபத்துக்கள் (பண்புகள்) | • படைப்பாளன் ஒருவனை நம்பி ஒழுகுவார்.<br>• நிகரில்லாத அல்லாஹ்வுக்குப் பல பண்புகள் உண்டு என்பதை விளங்கிச் செயற்படுவார்.<br>• அல்லாஹ்வின் பண்புகளை அல்குர்ஆனும் ஸுன்னாவும் போதித்தபடி விளக்கி எழுதுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 1.4.<br><br>மலக்குகளின் பண்புகளை அறிந்து விசுவாசிப்பார். | • மலக்குகள்<br>-பண்புகள்<br>-பணிகள் | • அல்லாஹ்வின் பண்புகளுக்கூடாக அவனை விளங்கி அஞ்சி ஒழுகுவார்.<br>• மலக்குகள் அல்லாஹ்வின் படைப்புக்களில் சிரேஷ்மானவர்கள் என்பதை விளக்குவார்.<br>• மலக்குகள் பற்றி குர்ஆன், ஸுன்னா கூறியவற்றை அறிந்து விளங்குவார்.<br>• மலக்குகளில் பதின்மரின் பெயர்களையும் அவர்களது பணிகளையும் பட்டியற்படுத்துவார்.<br>• மலக்குகளது பண்புகளையும் பொதுவான அவர்களது பணிகளையும் ஆதாரங்களுடன் முன்வைப்பார். | 02 |
| 2.0<br><br>**அர்கானுல் இஸ்லாம்**<br><br>இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார். | 2.1.<br><br>நஜீஸின் வகைகளை அறிந்து அவற்றை முறையாக அகற்றுவார். | • அத்தஹாரா<br>- நஜீஸ் வகைகள்<br>- நஜீஸை அகற்றும் முறைகள் | • நஜீஸின் வகைகளை அறிந்து கூறுவார்.<br>• நஜீஸை அகற்றும் முறைகளை விளக்கிக் கூறுவார்.<br>• நஜீஸ் அகற்றும் முறைகளை செய்து காட்டுவார்.<br>• நஜீஸ் அகற்றும் முறைகளை பின்பற்றி சுத்தமாக இருப்பார். | 02 |
| | 2.2.<br><br>சிறு தொடக்கு பெருந்தொடக்கு ஆகியவற்றிலிந்து நீங்கி தொழுகைக்கு ஆயத்தமாகுவார். | • தொழுகைக்கான ஆயத்தம்<br>- வுழு<br>- தயம்மும்<br>- ஜபீரத்<br>- உடற் சுத்தம்<br>- குளிப்பு | • சிறு தொடக்கிலிருந்து நீங்குவதற்காக செய்ய வேண்டியவற்றை சொல்லிக் காட்டுவார்.<br>• தயம்மும், ஜபீரத்திற்குரிய காரணங்களையும், நிறைவேற்றும் முறைகளையும் அறிந்து கூறுவார்.<br>• வுழு செய்யும் முறையை செய்து காட்டுவார்.<br>• தயம்மும் செய்யும் முறையினை செய்து காட்டுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.3<br>தொழுகையின் முக்கியத்துவத்தை அறிந்து தொழுகையைப் பேணிவருவார். | • தொழுகையின் முக்கியத்துவம் | • தொழுகையின் ஆயத்தங்களை அறிந்த கடைப்பிடிப்பார்.<br>• தொழுகையின் முக்கியத்துவம் மற்றும் சிறப்புக்கள் பற்றி விளக்கிக் கூறுவார்.<br>•தொழுகையை உயிரோட்டத்துடன் பேணி வருவார்.<br>• தொழுகையின் முக்கியத்துவம் அறிந்து, தொழுகையின் பால் அழைப்பார். | 02 |
| | 2.4<br>நோன்பு பற்றி அறிந்து நோன்பு நோற்றுவருவார். | • நோன்பின் முக்கியத்துவமும் அதன் சிறப்பும் | •நோன்பின் மகத்துவத்தை அறிந்து கூறுவார்.<br>•ரமழான் ஒரு மனிதனில் ஏற்படுத்தும் தாக்கத்தை விளக்கிக் கூறுவார்.<br>•பேணுதலாக நோன்பு நோற்று பாவங்களிலிருந்து தவிர்ந்து வாழ்வார்.<br>•ரமழானில் செய்யப்படும் நற்செயல்களை அதிகப்படுத்துவார். | 02 |
| | 2.5.<br>துஆக்களையும் திக்ர்களையும் அறிந்து அவற்றை ஓதிவருவார் | • துஆ<br>- பொதுவாகக் கேட்கும் துஆக்களும்<br>- சந்தர்ப்ப துஆக்களும் திக்ர்களும் | • “துஆ”, “திக்ர்” பற்றி அறிந்து கூறுவார்.<br>• பிரார்த்தனை இபாதத்தாகும் என்பதனை அறிந்து செயற்படுத்துவார்.<br>• பொதுவானதும், சந்தர்ப்பங்களில் ஓதுவதுமான துஆக்களை அறிந்து ஓதி வருவார்.<br>• இறை நினைவுடன் வாழ்வதுதான் (திக்ர்) முஸ்லிமின் கடமை என்பதை அறிந்து ஒழுகி வருவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **3.0**<br><br>**அல் அஹ்லாக் வத்தஸ்கிய்யா**<br><br>இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார். | 3.1.<br><br>நல்ல நட்பினூடாக வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார். | ● நல்ல நட்பினைத் தெரிவுசெய்தல் | • நட்பின் ஆன்மிக லௌகீகப் பயன்களை கண்டறிந்து கூறுவார்.<br>• நட்பு ஒருவனில் செல்வாக்குச் செலுத்தும் விதம் பற்றிக் கூறும் இரு ஹதீஸ்களை விளக்குவார்.<br>• நல்ல நண்பனிடம் காணப்பட வேண்டிய பண்புகளை அடையாளம் கண்டு கூறுவார்.<br>• தீய நட்பினால் ஏற்படும் பாதகங்களைப் பட்டியற்படுத்துவார். | 02 |
| | 3.2.<br><br>உதவி தேவைப்படுவபவர்களுக்கு உதவிசெய்வார். | ● பிறருக்கு உதவிசெய்தல்<br>- மூத்தோர்<br>- சிறியோர்<br>- நலிவுற்றோர் | • அல்லாஹ் எல்லாப் படைப்புக்களையும் இன்னொன்றின் உதவியில் தங்கி வாழும் நிலையிலேயே படைத்துள்ளான்.<br>• சமூகத்தில் எத்தகையோர் அதிகம் உதவி செய்யப்பட வேண்டியவர்கள் என்பதை இனங்கண்டு கூறுவார்.<br>• பிறர்க்கு உதவும் வழிமுறைகளை அடையாளப்படுத்துவார்.<br>• நாம் பிறர்க்கு உதவும் போது அல்லாஹ் எமக்கு உதவுவான் என்ற நம்பிக்கையுடன் செயற்படுவார். | 02 |
| | 3.3.<br><br>பிறர் பொருட்களை அனுமதியுடன் பயன்படுத்துவார் | ● பிறர் பொருட்களை அனுமதியுடன் பயன்படுத்துதல் | • ஒரு பொருளை அதன் உரிமையாளனின் அனுமதியின்றி பயன்படுத்த முடியாது என்பதனை அறிந்து கூறுவார்.<br>• உரிமையாளன் யார் என்று அறியப்படாத பொருட்கள் தொடர்பில் இஸ்லாமிய ஷரீஅத்தின் நிலைப்பாட்டைக் கூறுவார்.<br>• நாம் வாழும் சூழலில் சிலர் உரிமையாளனின் அனுமதி இன்றி பொருட்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு கூறுவர்.<br>• அனுமதி இன்றி ஒருவரது பொருளினைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புக்களைப் பட்டியற்படுத்துவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **4.0**<br>**மஸாதிருஷ் ஷரீஆ**<br>இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார். | 4.1.<br>நான்கு வேதங்களையும் அறிந்து அல்குர்ஆனிளை மகத்துவப்படுத்துவார். | • அல்-குர்ஆன்<br>- நான்கு வேதங்கள் அறிமுகம் | • நபிமார்களுக்கு வழங்கப்பட்ட நான்கு வேதங்களின் பெயர்களை அவற்றின் மொழிமூலத்துடன் முறையாக குறிப்பிடுவார்.<br>• அருளப்பட்ட அனைத்து வேதங்களும் முன்வைத்த வணக்கத்துக்குரியவன் பற்றிய எண்ணக்கருவை குறிப்பிடும் அல்குர்ஆன் வசனங்களை மனனமிட்டு ஓதுவார்.<br>• வேதங்களில் இறுதியானது அல்குர்ஆன் என்பதனை நம்பிக்கையில் இருத்தி கலந்துரையாடுவார்.<br>• அல்குர்ஆனின் புனிதத்தையும் அதன் மகத்துவத்தையும் அறிந்து செயற்படுவார். | 02 |
| | 4.2.<br>அல்குர்ஆனின் சூறாக்களை வாசித்து அவற்றின் பொருளைக் கூறுவார். | • சூறாக்கள் (பொருளும் விளக்கமும்)<br>- சூறத்துல் கத்ர் | • ஸூரதுல் கத்ரின் பதவிளக்கத்தைக் கூறுவார்.<br>• லைலதுல் கத்ர் இரவின் சிறப்பினை அறிந்து கூறுவார்.<br>• அல்குர்ஆன் அருளப்பட்ட சிறப்பு மிக்க லைலதுல் கத்ர் இரவின் மகிமை பற்றி மற்றையவர்களுக்கும் எடுத்துக் கூறுவார்.<br>• ஸூரா கத்ரை விளங்கி ஓதி வருவார். | 02 |
| | | - சூறத்துல் அலக் - முதல் ஐந்து வசனங்கள் | • ஸூரதுல் அலக் முதல் ஐந்து வசனங்களினதும் பதவிளக்கத்தை எடுத்துக் கூறுவார்.<br>• ஸூரதுல் அலக்கின் சிறப்பினை அறிந்து ஒப்புவிப்பார்.<br>• இந்த ஸூராவில் அடங்கும் விடயங்களை தானும் விளங்கி பிறருக்கும் விளக்குவார்.<br>• இந்த ஸூராவின் முதல் ஐந்து வசனங்களையும் செவிமடுக்கும்போது அவற்றின் பொருள்களைப் புரிந்து கொள்வார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.3.<br><br>ஸுன்னாவின் முக்கியத்துவத்தை அறிந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பார். | • ஸுன்னா<br><br>- முக்கியத்துவம் | • ஸுன்னா என்பதனை வரையறை செய்வார்.<br>• ஹதீஸ்களும், முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வாழ்வு முறையும் அல்குர்ஆனுக்கு விளக்கமாகும் என்பதை அறிந்து விளக்குவார்.<br>• ஸுன்னாவைப் பின்பற்றி தனது சொந்தவாழ்வையும் பொதுவாழ்வையும் அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதனை உணர்ந்து கூறுவார்.<br>• ஹதீஸ்கள் இரண்டை மனனமிட்டு அது உணர்த்தும் கருத்துப்படி தமது வாழ்வை அமைத்துக் கொள்வார். | 02 |
| | 4.4.<br><br>வெட்க உணர்வுடன் நடந்துகொள்வார் | - வெட்கம் தொடர்பான ஹதீஸ்கள் | • வெட்கம் மனிதனைப் பாதுகாக்கினறது என்பதனை அறிந்து கூறுவார்.<br>• வெட்கத்துடன் தொடர்பான ஹதீஸ்கள் சிலவற்றை மனனமிட்டு ஒப்புவிப்பார்.<br>• வெட்கம் ஈமானின் பாதியாகும் என்பதனை உணர்ந்து கூறுவார்.<br>• வெட்கம் என்ற பண்பில் முன்மாதிரியான நபி(ஸல்) அவர்களை பின்பற்றி நடப்பதுடன் பிறரையும் தூண்டுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 5.0<br>**அஸ்ஸீறா வத்தாரீஹ்**<br>நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார். | 5.1<br>முஹம்மத்(ஸல்) அவர்களின் மதீனாக் கால வாழ்வின் முன்மாதிரிகளை விளங்கிக் கடைப்பிடிப்பார். | • முஹம்மத் (ஸல்) அவர்கள்<br>- மதீனா வாழ்க்கை | • முஹம்மத் (ஸல்) அவர்களிடம் வாழ்வின் எல்லாத்துறைகளுக்குமான முன்மாதிரிகள் உண்டு என்பதை விளக்கிக் கூறுவார்.<br>• மதீனாவில் முஹம்மத்(ஸல்) அவர்கள் முன்மாதிரியான ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காக எடுத்த முயற்சிகளைச் சொல்லிக் காட்டுவார்.<br>• மதீனா சமூகத்தை ஆற்றுப்படுத்திய வழிமுறைகளை இனம் கண்டு கூறுவார்.<br>• மஸ்ஜிதுந் நபவியின் பங்களிப்பை விளங்கி எழுதுவார். | 02 |
| | 5.2<br>உம்மஹாதுல் மு:. மினீன்களின் வாழ்வுமுறையை அறிந்து கூறுவார் | • உம்மஹாத்துல் மு:.மினீன்<br>- ஹப்ஸா (ரழி) அவர்கள்<br>- உம்மு ஸல்மா (ரழி) அவர்கள் | • அன்னை ஹப்ஸா(ரழி) அன்னை உம்மு ஸலமா(ரழி) ஆகியோரின் குடும்பப் பின்னனியைக் கூறுவார்.<br>• நபி(ஸல்) அவர்களை மணமுடிக்க முன் அவர்களின் மணவாழ்வு பற்றி எழுதிக் காட்டுங்கள்.<br>• இரு அன்னையரும் நபி(ஸல்) அவர்களை மணமுடித்த பின்னணியை சொல்லிக் காட்டுவார்.<br>• இரு அன்னையர்களதும் முன்மமாதிரிகளை பின்பற்றி ஒழுகுவார். | 02 |
| | 5.3.1<br>ஸஹாபாக்களின் முன்மாதிரி களை எடுத்துக் கூறுவார் | • அஹ்லுல் பைத்<br>- ஹஸன் (ரழி)<br>- ஹுஸைன் (ரழி) | • ஹஸன், ஹுஸைன் (ரழி) ஆகிய இருவரும் நபி (ஸல்) அவர்களின் நேசத்திற்குரிய பேரர்களாக இருந்தார்கள் என்பதனை எடுத்துக் காட்டுவார்.<br>• ஹஸன், ஹுஸைன் (ரழி) ஆகிய இருவரதும் வாழ்க்கை ஓட்டத்தை எடுத்துக் காட்டுவார்.<br>• இருவரதும் வபாத் துயரமாக அமைந்த நிகழ்வை சொல்லிக் காட்டுவார்.<br>• இருவரதும் முன்மாதிரிகளை தொகுத்து சொற்பொழிவாற்றுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.3.2<br>ஸஹாபாக்களின் முன்மாதிரி களை எடுத்துக் கூறுவார் | • ஸஹாபாக்கள்<br>- பிலால் (ரழி)<br>- அம்மார் (ரழி | • பிலால்(ரழி), அம்மார்(ரழி) ஆகியோரின் மூதாதையரைக் குறிப்பிடுவார்.<br>• இருவரினதும் அடிமை வாழ்வை விளக்கிக் கூறுவார்.<br>• இருவரும் இஸ்லாத்திற்காக பட்ட துன்பங்களை அறிந்து எழுதுவார்.<br>• இருவரும் நபி(ஸல்)அவர்களின் ஆசிர்வாதத்திற்கு உட்பட்டவர்கள் என்பதை எடுத்துக் கூறுவார். | 02 |
| | 5.4<br>நபிமார்களின் முன்மாதிரிகளை எடுத்துக் கூறுவார். | • நபி (நூஹ்) அலை அவர்கள் | • நபி நூஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையை அறிந்து குறிப்பிடுவார்.<br>• நபி நூஹ் (அலை) அவர்களின் த.்வா பற்றி விளக்கி எழுதுவார்.<br>• நபி நூஹ் (அலை) அவர்களது வாழ்வின் முன்மாதிரிகளை பின்பற்றுவார். | 02 |
| **6.0 அல்முஆமலாத்**<br>பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார். | 6.1.<br>வீட்டினுள் கடைப்பிடிக்க வேண்டிய அவ்ரத்தை பேணுவார். | • வீட்டினுள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள்<br>• அவ்ரத் | • இஸ்லாமிய கண்ணோட்டத்தில் அவ்ரத் என்றால் யாது என்பதை விளங்கிக் கூறுவார்.<br>• ஆண் பெண் இரு பாலாரினதும் அவ்ரத்தை வரையறை செய்து கூறுவார்.<br>• வீட்டிற்குள்ளும் அவ்ரத்தை பேணுவதன் முக்கியத்துவத்தை விளங்கி பின்பற்றி நடப்பார்.<br>• அவ்ரத்தை பேணி உடை அணிவதால் ஏற்படும் கண்ணியத்தையும் உள திருப்தியையும் எடுத்துக் கூறுவார். | 02 |
| | 6.2<br>வீட்டினுள் பேண வேண்டிய அவ்ரத்தை பேணுவார். | • வீட்டினுள் பேண வேண்டிய அவ்ரத் ஒழுங்குகள்<br>-ஒழுக்கம்<br>-ஆன்மீகச் சூழல | • வீட்டினுள் ஒழுக்க விழுமியங்களைப் பேணி கடைப்பிடித்து ஒழுகுவார்.<br>• வீட்டுக்குள் ஆன்மீகச் சூழலைப் பேண வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து செயற்படுவார்.<br>• வீட்டுச் சூழலில் சுத்தத்தைப் பேணவேண்டும் என்ற உணர்வைப் பெற்று செயற்படுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **7.0** <br> **மபாஹிமுல் இஸ்லாமியா** <br> ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார். | 7.1. <br> பொதுச்சொத்துக்களை பேணிப் பாதுகாத்து வருவார். | • பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் | • பொதுச் சொத்து என்பதை வரையறுத்துக் கூறுவார். <br> • பொதுச் சொத்துக்கள் சிலவற்றை இனம் காட்டுவார். <br> • பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் முறையினை சொல்லிக் காட்டுவார். <br> • பொதுச் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசுவார். | 02 |
| | 7.2. <br> தேசப்பற்றுடன் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவார். | • தேசப்பற்று | • தேசத்தின் மீது பற்றுக் கொள்ள வேண்டும் என்பதை உறுதியோடு ஏற்றுக் கொண்டு செயல்படுவார். <br> • அதற்கான நியாயங்களை எடுத்துக் கூறுவார். <br> • நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரிகளை சுட்டிக்காட்டுவார். <br> • தேசப்பற்றின் விளைவுகளை ஆதாரங்களுடன் முன்வைப்பார். | 02 |

## 7.5 கற்றல்- கற்பித்தல் முறை

கலைத் திட்டத்தில் சமய பாடம் மிக முக்கியமானதொன்றாகும். மாணவர் மிகவும் விரும்பத்தக்க விதத்தில் கவர்ச்சியாகவும் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும் விதமாகவும் நடைமுறை வாழ்வில் பயிற்சிக்கு வரும் விதமாகவும் அதன் கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கை அமைத்துக் கொள்வது இன்றியமையாததாகும். மாணவர்களது ஆக்கத் திறன், கற்பனைத் திறன், தொடர்பாடல் திறன், சமூக திறன் ஆகியவற்றை வளர்த்து வெளிக்கொணரும் விதமாக கற்றல்- கற்பித்தல் முறை அமைய வேண்டும்.

குறிப்பாக, சமய பாடத்தைப் பொறுத்தவரை மாணவர்களின் மூளையை அறிவாலும் தகவல்களாலும் போஷிக்கச் செய்து பரீட்சை எழுதும் திறனை மாத்திரம் வளர்த்து விடுவது போதுமானதல்ல. மாறாக, மாணவரிடையே தெளிவானதும் நிலையானதுமான ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டும். பொருத்தமான கற்றல்- கற்பித்தல் முறைகளைத் தெரிந்திருப்பது ஆசிரியரின் தலையாய பணியாகும். இதன்போது வயது, அனுபவம், சூழல், தனியாள் வேறுபாடு என்பவற்றைக் கருத்திற் கொள்வது வரவேற்கத்தக்கது.

இப்புதிய கலைத்திட்ட ஒழுங்கமைப்பில் கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கு மாணவர்களை மையமாகக் கொண்டே இடம்பெற வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. எனவே, புதிய கற்றல்- கற்பித்தலில் மாணவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும் விதமாக மாணவர்களது தொழிற்பாடுகள் மிகைத்துக் காணப்பட வேண்டும்.

கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கில் ஆசிரியர் தனது மாணவரது தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவர்கள் எதிர்கொள்கின்ற இடர்பாடுகளை நிவர்த்தித்து உற்சாகமூட்டியும் திறமைகள், ஆற்றல்களுக்கு மதிப்பளித்து பாராட்டியும் நடந்து கொள்ள வேண்டும்.

கற்றல்- கற்பித்தல் முறைகள் சில தரப்பட்டுள்ளன.

- கலந்துரையாடல் முறை
- பங்கேற்றுக் கற்றல் முறை
- தகவல் திரட்டும் முறை
- கதை கூறல் முறை
- விரிவுரை முறை
- குழு முறை
- செய்து காட்டல் முறை
- பாத்திரமேற்று நடிக்கும் முறை
- சிந்தனைக் கிளர்வு முறை

இவ்வாறான முறைகளுடன் பாடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமான மாணவர் மைய சூழலைத் தேர்ந்தெடுப்பது வரவேற்கத்தக்கது.
மாணவரின் கற்றலை மேம்படுத்த உதவும் வகையில் இஸ்லாமிய சஞ்சிகைகள், செய்தித் தாள்கள், மேலதிக வாசிப்பு நூல்கள், பத்திரிகை நறுக்குகள், வரைபடங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

மேலும் கற்றலை இலகுபடுத்தி, கவர்ச்சிகரமானதாக்கிக் கொள்வதற்காக கற்றல்- கற்பித்தல் சாதனங்கள், பொருத்தமான இணையத்தளம் போன்றவற்றை தேவைக்கேற்ப பயன்படுத்துவது உசிதமானதாகும்.

மேலும் பாடசாலையிலும் சுற்றாடலிலும் நடைபெறுகின்ற சமய, கலாசார நிகழ்ச்சிகள், வேலைத் திட்டங்கள் போன்றவற்றில் மிகப் பொருத்தமானவற்றை இனங்கண்டு அவற்றில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்து பயன்பெற வழிகாட்ட முடியும்.

எனவே, மாணவர்கள் இஸ்லாம் பாடத்தை ஆர்வத்தோடு கற்று முன்மாதிரிமிக்க முஸ்லிமாகவும் நாட்டுக்கு நல்ல பிரஜையாகவும் வாழ்வதற்கான பயிற்சியை வழங்கும் விதத்தில் கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கை காத்திரமாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் ஆசிரியர்கள் அமைத்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

## 7.6 பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

எமது நாட்டின் கலைத்திட்டம் அறிவு வளர்ச்சி, திறன் விருத்தி, மனப்பாங்கு மாற்றம் என்பவற்றை ஏற்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்படுகின்றது.

இஸ்லாம் ஒரு வாழ்வு முறையாக அமைவதால் பாடசாலைச் சூழலில் மனப்பாங்கு மாற்றத்தையும் அதற்கூடாக செயற்பாட்டுச் சீர்மையையும் ஏற்படுத்துவதற்கான அறிவும் முறையான பயிற்சியும் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம்.

- சமய, பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.
- வெளிக்களப் பயணங்கள், கல்விச் சுற்றுலாக்கள் போன்றவற்றை ஒழுங்குசெய்து அவற்றின் மூலம் சமய, கலாசார மையங்களைத் தரிசிக்கச் செய்தலும் அவற்றுக்கு மதிப்பளித்தலும்.
- புத்தாக்க செயற்பாடுகளை உள்ளடக்கிய முஹர்ரம் புத்தாண்டை வரவேற்றல், ரமழான் மாதத்தை வரவேற்றல், மீலாத் தொடர்பான ஆக்க முயற்சிகளை மேற்கொள்ளல் போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- இனங்காணப்பட்ட புத்தாக்கத் திறனுள்ள மாணவர்களின் திறமையை மேம்படுத்தும் வகையில் வளப்பங்களிப்புச் செய்யக் கூடியவர்களை வரவழைத்து செயலமர்வுகளை ஒழுங்கு செய்தலும் அவர்களின் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தலும்.
- பாடசாலைச் சுற்றாடலை சுத்தமாக வைத்திருத்தல், அழகுபடுத்தல், பராமரித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக தனித்தனி மாணவக் குழுக்களை அமைப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்தல்.
- தேசிய, சர்வதேச தினங்களை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தல்.
- இஸ்லாமிய நடைமுறைகளின் யதார்த்தபூர்வமான உண்மைகளைப் புரியவைத்து, மாணவர்கள் அவற்றை உணர்ந்து பின்பற்றுவதற்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.

இத்தகைய பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு பாடசாலை முறைமையிலுள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் முதலானோரின் பங்களிப்பு அவசியமாகின்றது. இப்பணியை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்குத் தேவையான பௌதிக, மனித வளங்களை இனங்கண்டு அவற்றின் மூலம் பாடசாலைச் சமூகம் பயன்பெறலாம்.

மேலும் குறித்த செயற்பாடுகளை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவற்றை ஏற்பாடு செய்து அதன் மூலம் கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளில் வினைத்திறனை அதிகரிக்கச் செய்யலாம்.

இஸ்லாம் பாடத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளின் கால நேரத்தைக் கவனத்திற் கொண்டு குறித்த நேரத்திற்குள் மாணவர்கள் கூடிய பயனைப் பெறும் வகையில் பாட ஆசிரியர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பாடத்துக்காக ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும்போது, இஸ்லாம் பாடத்துக்காக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், இஸ்லாமிய ஷரீஆ கலாநிலையங்களில் தராதரம் பெற்றவர்கள், இஸ்லாமிய கலாசாரத்தை ஒரு பாடமாகக் கற்ற பட்டதாரிகள் என்போரை ஈடுபடுத்துவது பயன்மிக்கதாக அமையும்.

இந்தப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இஸ்லாமிய அறிவும், சிந்தனைத் தெளிவுமுள்ள, ஒழுக்க விழுமியங்களைப் பேணி நடக்கின்ற, நேர்முறையாகச் சிந்திக்கின்ற, நல்ல உள்ளங்கொண்ட சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயனளிக்கக்கூடிய எதிர்கால சந்ததியை உருவாக்கும் பணியில் வெற்றி காணலாம்

## 7.7 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல்- கற்பித்தல் நடவடிக்கைகளுக்கூடாக மாணவர்களின் கற்றல் பேறுகளை அளவிடும் ஒரு வழிமுறையாகவே கணிப்பீடும் மதிப்பீடும் அமைகின்றது. இது ஒவ்வொரு பாட வேளையிலும் இடம்பெற வேண்டிய ஒரு செயன்முறையாகும்.

இஸ்லாம் பாட உள்ளடக்கத்தினூடாக மாணவரின் நடத்தை சார்ந்த பண்புகள், வணக்க வழிபாடுகள் மீது கொண்டுள்ள அக்கறை, சமய சமூக செயற்பாடுகளில் ஈடுபாடு போன்றன கணிப்பீடு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது வகுப்பறைக்குள்ளேயும் வகுப்பறைக்கு வெளியேயும் குறித்த தேர்ச்சியை அடைந்துள்ளாரா என முறைசார்ந்த அல்லது முறைசாராத வகைகளில் இடம்பெற முடியும்.

பாட ஆரம்பம் முதற்கொண்டே கணிப்பீடு செய்யப்பட்டு, இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு பரிகாரக் கற்பித்தலை உடனடியாக ஆரம்பிப்பது பயனுடையதாக அமையும். கணிப்பீட்டுக் கருவி ஆளுக்காள் வேறுபடுவதோடு இஸ்லாம் பாடம் தொடர்பான மதிப்பீடு, கற்றல் கற்பித்தல் முடிவுற்ற பின்பும் மாத, தவணை, ஆண்டு இறுதியிலும் வாய்மொழி வினாக்களுக்கூடாகவோ, எழுத்து மூலமாகவோ, வேலைத் திட்டங்களுக்கூடாகவோ இடம்பெற முடியும். இவற்றுக்குப் பொருத்தமான நியதிகள், வழிமுறைகளை நேர காலத்துடன் உருவாக்கிக் கொள்வது அவசியமாகும்.

இவை தவிர, ஸூறாக்கள், அத்கார்கள், ஹதீஸ்கள், துஆக்கள் முதலியவற்றின் எழுத்துக்கள் சரியாக உச்சரிக்கின்றனரா, மனனமிட்டுள்ளனரா, குறித்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்துகின்றனரா என்பவற்றையும் மதிப்பீடு செய்தல் வேண்டும். இதற்காக மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்துக் கொள்வதற்கான அனுபவத்தை ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், கணிப்பீடும் மதிப்பீடும் மாணவர்களுக்குரியது மட்டுமன்றி, ஆசிரியர்களுக்கும் முக்கியமானது என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இஸ்லாம் பாடத்தில் மனப்பாங்கு தொடர்பான கணிப்பீட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமானதாகும். பாடத்திட்டத்தில் இடம்பெறும் அல்குர்ஆன் ஸூறாக்கள், சந்தர்ப்ப துஆக்கள் என்பவற்றைக் கணிப்பீடு செய்யும்போது அறபு எழுத்துக்களின் உச்சரிப்பு, நீட்டல்- குறுக்கம், மனனமிட்டிருத்தல் போன்றன அவதானிக்கப்படல் வேண்டும். கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டில் கணிப்பீடும் மதிப்பீடும் தவிர்க்க முடியாதவை. ஏனெனில் கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றி- தோல்வி அதற்கூடாகவே தீர்மானிக்கப்படுகின்றது.

# கற்றல் - கற்றல் செயற்முறைக்கான வழிகாட்டல்கள்

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 : ஈமான் பற்றிய அடிப்படைகளை அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஈமான் ஒரு முஸ்லிமினது வாழ்வின் அடிப்படை என்பதை ஏற்று ஒழுகுவார்.
- ஈமானின் வகைகளை வகைப்படுத்திக் கூறுவார்.
- தௌஹீதின் பிரதான உள்ளடக்கங்களை விளக்கி எழுதுவார்.
- ஈமானின் ஆறு அம்சங்களுக்கும் குர்ஆன் ஸுன்னா ஆதாரங்களைத் தேடி முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- ஈமான் எனும் அறபுச் சொல்லின் நேரடிக் கருத்து நம்புதல் என்பதாகும். புலனறிவுக்குட்பட்ட அல்லது உட்படாத ஒன்று இருப்பதாக ஏற்றுக் கொள்ளலே நம்பிக்கையாகும். நம்பிக்கையே எமது வாழ்வை இயக்குகிறது. நெருப்பு சுடும் என்ற நம்பிக்கை நெருப்பில் கைவைத்திடத் தடுக்கிறது... இப்படி நம் வாழ்வை இயக்க உந்து சக்தியாக இருக்கும் சில நம்பிக்கைகள் பற்றி மாணவரிடம் வினவிப் பாடப் பிரவேசம் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஒரு முஸ்லிமினது வாழ்வின் அடிப்படை, ஈமான் ஆகும்.
  - ஈமான் கொள்ள வேண்டிய ஆறு அம்சங்கள் காணப்படுகின்றன. அவற்றை தௌஹீத், ரிஸாலத், மஆத் என்ற மூன்று பகுதிகளுக்குள் அடக்கலாம்.
  - ஈமான் கொள்ள வேண்டியவற்றை குர்ஆனும் ஸுன்னாவும் விளக்குகின்றன.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்
    - ஒருவன் முஸ்லிமாவதற்கு அடிப்படை ஈமான் ஆகும்.
    - அல்லாஹ்வையும் அவனது மலக்குகளையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் இறுதி நாளையும் நன்மை, தீமையின் முன்னளப்பு அல்லாஹ்வினால் நிகழ்வதெனவும் நம்புதல் ஈமான் முபஸ்ஸல் எனப்படும். ஈமானின் அம்சங்களை சுருக்கமாக நம்புதல் ஈமான் முஜ்மல் எனப்படும்.
    - ஈமானின் சகல அம்சங்களையும் விளங்கி உணர்ந்து அவற்றை நம்புதல் ''ஈமான் இக்தியாரி'' என்றும், விளங்கி உணராவிட்டாலும் மற்றவர்கள் கூறுவதைக் கேட்டு அதன்படி நம்பிக்கை கொள்ளல் ''ஈமான் தக்லீதி'' எனவும் அழைக்கப்படும்.
    - அல்லாஹ் மற்றும் அவனது தக்தீருடன் தொடர்பான நம்பிக்கைகள் தௌஹீத் என்ற பகுதியிலும் இறைத்தூது, வேதங்கள் தொடர்பான நம்பிக்கைள் ரிஸாலா என்ற பகுதியிலும் மறுமை, சுவனம், நரகம் போன்றவற்றுடன் தொடர்பான நம்பிக்கைகள் மஆத் என்ற பகுதியிலும் உள்ளடங்குகிறது.
    - ஒருவனது நம்பிக்கை, குர்ஆனிலும் ஸுன்னாவிலும் கூறப்பட்டிருப்பது போலவே அமைய வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** நம்பிக்கை ஒருவனது வாழ்வை எவ்வாறெல்லாம் தொழிற்பட வைக்கிறது என்பது பற்றிக் கலந்துரையாடி சில உதாரணங்கள் மூலம் விளக்கி எழுதுங்கள்.

**குழு-2** நம்பிக்கை கொள்ள வேண்டிய அடிப்படையான அம்சங்களுக்கான ஆதாரங்களை குர்ஆன் ஸுன்னாவிலிருந்து தேடிக் கண்டறிந்து எழுதுங்கள்.

**குழு-3** நம்பிக்கை கொள்ள வேண்டிய அம்சங்களுள் ''ரிஸாலத்'' என்ற பகுதியில் உள்ளடங்கக் கூடியவற்றை கலந்துரையாடிக் குறித்துக் கொள்ளுங்கள்.

**குழு-4** அல்லாஹ்வின் ஏகத்துவம் - தௌஹீத் - பற்றிய நம்பிக்கைப் பகுதியில் அடங்குபவற்றை கலந்துரையாடி குறித்துக் கொள்ளுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

ஈமான் கொண்ட ஒருவரது செயற்பாட்டிற்கும் ஈமான் கொள்ளாத ஒருவரின் செயற்பாட்டுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடுகளை பெற்றோருடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2 : அல்லாஹ் வணக்கத்துக்குரியவன் என்பதை விளக்கிக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே என்பதை உறுதியாக நம்பி ஒழுகுவார்.
- அல்லாஹ் ஒருவனையே வணங்கி வருவார்.
- அல்லாஹ்விடம் மாத்திரமே பிரார்த்தனைகளை முன்வைப்பார்.
- அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று பின்பற்றி நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- وَمَا خَلَقْتُ ٱلْجِنَّ وَٱلْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ ﴿٥٦﴾

  (எனக்கு வழிப்பட்டு என்னை) வணங்குவதற்கன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் படைக்கவில்லை என்ற அல்குர்ஆன் வசனத்தை அழகிய குரலில் ஓதக்கூடிய ஒரு மாணவனைக் கொண்டு ஓதச் செய்து அதன் பொருளை வாசித்துக் காட்டி அதுபற்றி மாணவர்களது கருத்துக்களை வினவி பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் ஒருவனே ஆவான்.
  - எல்லா நிலைகளிலும் அவனுக்கு மாத்திரமே அடிமைப்பட்டு நடக்க வேண்டும்.
  - எல்லா நபிமார்களும் அல்லாஹ் ஒருவனையே வணங்கும்படி போதித்தனர்.
  - அல்லாஹ் வணக்கத்துக்குரியவன் என்பதை ஏற்க மறுப்பது ஈமானுக்கு முரணானதாகும்.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்
    - வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் ஒருவனே ஆவான் என்பது இஸ்லாத்தின் அடிப்படைப் போதனைகளில் ஒன்றாகும்.
    - அல்லாஹ்வை வணங்குவதென்பது அவன் கட்டளைகளை அப்படியே எடுத்துநடப்பதும் அவன் தூதரின் வழிகளை ஏற்று நடப்பதுமாகும்.
    - எல்லா வணக்கங்களும் அவன் ஒருவனுக்கே செலுத்தப்பட வேண்டும். வணக்கத்தில் அல்லாஹ்வோடு இன்னொருவரை இணைப்பது ஷிர்க்காகும்.
    - "நீங்கள் அவனையன்றி விரும்பியவர்களை வணங்கிக் கொண்டிருந்தால் அதற்குரிய தண்டனையை அடைவீர்கள்" (அஸ்ஸுமர் : 11-15)
    - "உமக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம் நிச்சயமாக என்னைத் தவிர வேறு நாயனில்லை. எனவே என்னையே நீங்கள் வணங்குங்கள் என்று வஹி அறிவித்தோம்" (அல் அன்பியா : 25)
    - வணக்கத்துக்குரியவனும், பிரார்த்தனைகளுக்குப் பதிலளிப்பவனும் வாழ்க்கைக்குரிய சட்ட ஒழுங்குகளை காட்டித் தருபவனும் அல்லாஹ் ஒருவனே ஆகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்பதன் விரிந்த பொருளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

குழு-2 நமது வாழ்வில் அல்லாஹ் ஒருவனுக்கு மாத்திரம் நாம் செலுத்தும் கடமைகளை கலந்துரையாடிப் பட்டியல் படுத்துங்கள்.

குழு-3 வணக்கங்களை அல்லாஹ்வுக்கு மாத்திரம் செலுத்தாத போது இவ்வுலகிலும் மறு உலகிலும் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி கலந்துரையாடி எழுதுங்கள்.

குழு-4 முன்னைய நபிமார்களது போதனைகளின் சாரம் எவ்வாறு அமைந்திருந்தது என்பது பற்றி குழுவாக குர்ஆனில் தேடி குறித்துக் கொள்ளுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும் என்பதற்கான நியாயங்களை பெற்றோருடன் அல்லது ஆலிம்களுடனோ கலந்துரையாடி எழுதிக் கொள்ளுங்கள்.

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 : அல்லாஹ்வின் பண்புகளை அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- படைப்பாளனாகிய அல்லாஹ் ஒருவனை நம்பி ஒழுகுவார்.
- நிகரில்லாத அல்லாஹ்வுக்குப் பல பண்புகள் உண்டு என்பதை விளங்கிச் செயற்படுவார்.
- அல்லாஹ்வின் பண்புகளை அல்குர்ஆனும் ஸுன்னாவும் போதித்தபடி விளக்கி எழுதுவார்.
- அல்லாஹ்வின் பண்புகளுக்கூடாக அவனை விளங்கி அஞ்சி ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**
- அல்லாஹ்வின் பண்புகள் குறித்து மாணவர்கள் அறிந்து வைத்துள்ளவற்றை வினவி கரும்பலகையில் குறித்துக் கொள்ளுங்கள். அவை பற்றிச் சிறிய விளக்கமொன்றை வழங்கிப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - ஒவ்வொரு பொருளும் அவற்றை உண்டாக்கியவன் இருக்கிறான் என்பதை உணர்த்துகின்றன.
    - படைப்பாளன் ஒருவனான அல்லாஹ் புலன்களுக்கு அப்பாற்பட்டவன்.
    - அவனுக்குப் பல பண்புகளும் பெயர்களும் காணப்படுகின்றன.
    - குர்ஆன், ஸுன்னா போதனைகள் மூலமே அவனை அறிந்து கொள்ள வேண்டும்.
    - அல்லாஹ்வின் பண்புகளைத் தெரிந்து கொள்வதன் மூலமே அவனை விளங்கிக் கொள்ள முடியும்.

**படி 2 :**
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3 :**
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்
  - ''ஸிபதுல்லாஹ்'' என்பது அல்லாஹ்வின் பண்புகளையே குறிக்கும்.
  - அவனது பண்புகள் வாஜிபாத், முஸ்தஹீலாத், ஜாஇஸாத் என மூன்றாக வகுக்கப்பட்டுள்ளன.
  - 'வாஜிபாத்' என்பது அல்லாஹ்வுக்கு கட்டாயமாக இருக்கக்கூடிய பண்புகளையும் ''முஸ்தஹீலாத்'' என்பது அல்லாஹ்வுக்கு ஒருபோதும் இருக்காத பண்புகளையும் ''ஜாஇஸ்'' என்பது அல்லாஹ் தான் விரும்பியதை விரும்பியவாறு செய்வதும் செய்யாமல் விடுவதும் அவனுக்கே உரியன என்பவற்றையும் குறிக்கும்.
  - அல்லாஹ்வின் பண்புகளை நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் கொண்டிருந்த கருத்தில் விளங்கிக் கொள்வதே ஏற்புடையதாகும்.
  - அல்குர்ஆன் அல்லாஹ்வின் பண்புகளை விளக்குகின்றது.
  - (யாவற்றுக்கும்) முந்தியவனும் அவனே; பிந்தியவனும் அவனே; பகிரங்கமானவனும் அவனே; அந்தரங்கமானவனும் அவனே; மேலும் அவன் அனைத்துப் பொருட்களையும் நன்கறிந்தவன். (ஹதீத் : 03)
  - அவனைப் போன்று எப்பொருளும் இல்லை; அவன்தான் (யாவற்றையும்) செவியேற்பவன்; பார்ப்பவன் (அஷ்ஷூறா: 11)
  - அவன் நித்திய ஜீவன் என்றும் நிலைத்திருப்பவன் யாவற்றையும் செவியேற்பவனும் பார்ப்பவனும் அவனேயாவான்.
  - அல்லாஹ்வின் பண்புகளில் ஒருபோதும் சந்தேகம் கொள்ளக் கூடாது. அவன் கூறியபடி நம்ப வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

- அல்லாஹ்வின் வாஜிபான, முஸ்தஹீலான பண்புகளை ஒவ்வொன்றாகத் தனித்தனி அட்டைகளில் எழுதி ஒரு பெட்டியில் இடுங்கள். அப்பெட்டிக்கு இலக்கம் ஒன்று எனப் பெயரிடுங்கள்.
- அவை ஒவ்வொன்றினதும் பொருளையும் தனித்தனி அட்டைகளில் எழுதி மற்றொரு பெட்டியில் இடுங்கள். அப்பெட்டிக்கு இலக்கம் இரண்டு என பெயரிடுங்கள்.

**குழு-1** முதலாம் பெட்டியில் இருந்து 10 அட்டைகளை பொறுக்கி எடுத்துக் கொள்ளுங்கள்.

**குழு-2** இரண்டாம் பெட்டியில் இருந்து 10 அட்டைகளை பொறுக்கி எடுத்துக் கொண்டு வேறாக நில்லுங்கள்.

**குழு-3** முதலாம் பெட்டியில் மீதமுள்ள 10 அட்டைகளை பொறுக்கி எடுத்துக் கொள்ளுங்கள்.

**குழு-4** இரண்டாம் பெட்டியில் மீதமுள்ள 10 அட்டைகளை பொறுக்கி எடுத்துக் கொள்ளுங்கள்.

முதலாம் குழு உறுப்பினர்கள் தம்மிடமுள்ள அட்டைகளை ஒவ்வொன்றாக வாசிக்கும் போது அதன் பொருள் எழுதப்பட்ட அட்டையை வைத்திருக்கும் மூன்றாம் அல்லது நான்காம் குழுவில் உள்ளவர்கள் அவரோடு இணைந்து கொள்ளுங்கள். அவ்வாறே இரண்டாம் குழுவினர் தம்மிடமுள்ள அட்டைகளை ஒவ்வொன்றாக வாசிக்கும் போது அதன் பொருள் எழுதப்பட்ட அட்டையை வைத்திருக்கும் மூன்றாம் அல்லது நான்காம் குழுவினர் அவரோடு இணைந்து கொள்ளுங்கள்.

இறுதியில் வாஜிபான பண்புகளும் அவற்றின் பொருளும் எழுதப்பட்ட அட்டைகளை சுமந்திருப்போர் அவற்றை ஒன்றாக சேகரித்து ஆசிரியரிடம் வழங்குங்கள். அவ்வாறே முஸ்தஹீலான பண்புகளும் அவற்றின் பொருள்களும் எழுதப்பட்ட அட்டைகளை சுமந்திருப்போர் அவற்றையும் சேகரித்து ஆசிரியரிடம் வழங்குங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

அல்லாஹ்வின் ஸலவாத்துக்கள் அடங்கிய பைத் - கஸீதாவை ஆலிம் அல்லது ஆசிரியர் ஒருவரின் துணையோடு தேடிப் பெற்று மனனமிட்டுக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.4 : மலக்குகளின் பண்புகளை அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- மலக்குகள் அல்லாஹ்வின் படைப்புக்களில் சிரேஷ்டமானவர்கள் என்பதை ஏற்று அவர்களை விசுவாசித்து ஒழுகுவார்.
- மலக்குகள் பற்றி குர்ஆன், ஸுன்னா கூறியவற்றை அறிந்து விளக்குவார்.
- மலக்குகளில் பதின்மரின் பெயர்களையும் அவர்களது பணிகளையும் பட்டியற்படுத்துவார்.
- மலக்குகளது பண்புகளையும் அவர்களது பொதுவான பணிகளையும் ஆதாரங்களுடன் முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- ஹதீஸ் ஜிப்ரீலை மாணவர்களுக்கு கதையாக எடுத்துச் சொல்லி மலக்குகள் பல உருவங்களில் தோன்றுவார்கள் என்பதை விளக்குவதன் ஊடாக பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - மலக்குகளை நம்புவது ஈமானின் ஓர் அம்சமாகும்.
  - அல்லாஹ் மலக்குகளை ஒளியினால் படைத்துள்ளான்.
  - மலக்குகள் பல உருவங்களில் தோன்றுவார்கள்.
  - அல்லாஹ் மலக்குகளுக்கு பல பொறுப்புக்களை வழங்கியுள்ளான்.

**படி 2 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3 :**

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்

    - மலக்குகளை விசுவாசம் கொள்வதன் அவசியம் பற்றி குர்ஆன் (உ-ம்) பகரா: 285, அந்நிஸா: 136 இல் குறிப்பிடுகிறது.
    - குர்ஆனில் ஏறத்தாழ 33 சூராக்களில் 75 இடங்களில் மலக்குகளைப் பற்றி கூறப்பட்டுள்ளது.
    - மலக்குகள் அல்லாஹ்வின் அற்புதப் படைப்பாகும். அவர்களது உண்மைத் தன்மையை அல்லாஹ் ஒருவனே நன்கறிவான். அவர்கள் பலம் மிக்கவர்கள்; இறக்கைகளை உடையவர்கள்; பாவம் செய்யாதவர்கள்; சந்ததி அற்றவர்கள்; பசி, தாகம் நித்திரை விருப்பு, வெறுப்பு போன்ற உணர்வுகள் அவர்களிடம் இல்லை.
    - விசேட பண்புகளைப் பெற்ற இவர்கள் எம்மோடு இருக்கின்றனர். நாம் அவர்களைக் காண்பதில்லை எனினும் அவர்கள் பல தோற்றங்களில் வருவார்கள்.
    - மலக்குகள் மர்யம் (அலை) அவர்களிடம் பூரண மனித வடிவில் வந்ததாகவும் (மர்யம் : 17) , இப்ராஹிம் (அலை) அவர்களிடம் விருந்தாளி வடிவில் வந்தாகவும் (அஸ்ஸாரியாத் : 24-28) தாவுத் (அலை) அவர்களிடம் வாதாட்டக்காரன் வடிவில் வந்ததாகவும் (ஸாத் :21-26) அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.
    - மலக்குகளில் பதின்மர் முக்கியமானவர்கள். அவர்களில் சிலரது பெயர்களை குர்ஆன் குறிப்பிடுகின்றது. மலக்குகள் பல்வேறு பணிகளை நிறைவேற்றுகின்றனர்.

| | |
|---|---|
| - அர்ஷை சுமக்கின்றனர். | (அல் ஹாக்கா : 17) |
| - சூர் ஊதுவர் | (அஸ்ஸுமரா : 68) |
| - தூது கொண்டு செல்கின்றனர். | (பாதிர் : 01) |
| - பாதுகாப்பு வழங்குகின்றனர். | (அல் இன்பிதார் : 10-12) |
| - செயல்களை பதிவுசெய்கின்றனர். | (அல் இன்பிதார் : 10-12) |
| - ரூஹை கைப்பற்றுகின்றனர். | (அஸ்ஸஜ்தா : 11) |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** மலக்குகளது பணிகள் பற்றி கலந்துரையாடி குர்ஆனிலிருந்து ஆதாரம் தேடி எழுதுங்கள்.

**குழு-2** முன்னைய வகுப்புக்களில் கற்ற மலக்குகள் பதின்மரின் பெயர்களையும் பணிகளையும் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-3** மலக்குகள் பற்றிய நம்பிக்கை ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்து கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-4** மலக்குகளின் பண்புகளிலிருந்து மனிதன் தனது வாழ்வில் எடுத்து நடக்கக் கூடிய சில அம்சங்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

மலக்குகள் பல்வேறு வடிவங்களில் தோன்றுவார்கள் என்பதற்கு ஹதீஸ் ஆதாரங்கள் சிலவற்றைப் பெற்றோருடன் கலந்துரையாடி குறித்துக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 : நஜீஸின் வகைகளை அறிந்து அவற்றை முறையாக அகற்றுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நஜீஸின் வகைகளை அறிந்து கூறுவார்.
- நஜீஸை அகற்றும் முறைகளை விளக்கிக் கூறுவார்.
- நஜீஸ் அகற்றும் முறைகளைச் செய்து காட்டுவார்.
- நஜீஸ் அகற்றும் முறைகளைப் பின்பற்றி சுத்தமாக இருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- ''உங்களில் ஒருவருக்கு சொந்தமான பாத்திரத்திலுள்ள நீரில் நாய் வாயை விட்டால் அப்பாத்திரத்தை ஏழு முறைகள் கழுவ வேண்டும். முதலாவது தடவையில் சுத்தமான மண் கரைசலை உபயோகிக்க வேண்டும்'' (முஸ்லிம்)
- இந்த ஹதீஸைக் கூறி மாணவர்களுடன் கருத்துப் பரிமாறுவதனூடாக பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- நஜீஸ் பற்றி மாணவர்கள் அறிந்து வைத்திருப்பவற்றை வெளிப்படுத்த சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - இஸ்லாம் நஜீஸின் வகைகளைப் பிரித்துக்காட்டி அதிலிருந்து சுத்தமாகும் வழிமுறைகளையும் விளக்கியுள்ளது.
  - சுத்தம் பேணி வாழ்வதற்கு ஒரு வழிமுறையாக நஜீஸ் அகற்றும் முறையை இஸ்லாம் கற்றுத் தந்துள்ளது.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்
    - சுத்தம் செய்யும் முறையைக் கருத்திற் கொண்டு நஜீஸ் கடுமையானது, சாதாரணமானது, இலகுவானது என வகைப்படுத்தி நோக்கப்படுகின்றது.
    - கடுமையான நஜீஸில் நாய், பன்றி, இவற்றின் மலம், சலம், உமிழ்நீர், வியர்வை, இரத்தம், வாந்தி என்பன உள்ளடங்கும். இவ்வகை நஜீஸ் பட்ட இடத்திலிருந்து நஜீஸை அகற்றிவிட்டு ஏழு தடவை நீரூற்றி கழுவுதல் வேண்டும். அதில் முதல் தடவை மண் கரைசல் கொண்டு கழுவுதல் வேண்டும். நஜீஸின் மூவகைப் பண்புகளும் புலப்படாவிட்டாலும் ஏழு தடவை கழுவவேண்டும்.
    - இலகுவான நஜீஸில் தாய்ப்பாலை மாத்திரம் உணவாகக் கொள்ளும் இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளையின் சிறுநீர் அடங்கும். குறித்த நஜீஸை பிழிந்தோ அல்லது வேறு எவ்வகையிலோ அகற்றிவிட்டு அவ்விடத்தின் மீது நீரைத் தெளித்துவிடுவதன் மூலம் சுத்தப்படுத்தலாம்.
    - கடுமையான, இலகுவான நஜீஸ் என இஸ்லாம் குறித்துள்ளவை தவிர்ந்த அனைத்து நஜீஸ்களும் சாதாரண நஜீஸ்களாகும். உதாரணமாக மலம், சலம். சிறுநீர், இரத்தம், சீழ், வாந்தி, வீணீர், மதுபானம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான நஜீஸ்கள் பட்ட இடத்திலிருந்து அவற்றை அகற்றி அவற்றின் சுவை, நிறம், மணம் ஆகிய மூன்றும் நீங்கக் கூடியதாகக் கழுவ வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** மூன்று வகையான நஜீஸ்களையும் உதாரணங்களுடன் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-2** கடுமையான நஜீஸ்களிலிருந்து சுத்தமாகும் முறையினைக் குறிப்பிட்டு, அதனை செய்து காட்டுங்கள்.

**குழு-3** இலகுவான நஜீஸை சுத்தப்படுத்தும் முறையினை எழுதிச் செய்து காட்டுங்கள்.

**குழு-4** சாதாரண நஜீஸை சுத்தப்படுத்தும் முறையினை விளக்கி எழுதி, அதனை செய்து காட்டுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

வீட்டோடு சம்பந்தப்படக்கூடிய இலகுவான, சாதாரண நஜீஸ்கள் பற்றி தாயுடன் கலந்துரையாடி அதனை சுத்தப்படுத்தும் முறையினைப் பற்றி எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 : சிறு தொடக்கு பெருந்தொடக்கு ஆகியவற்றிலிருந்து நீங்கி தொழுகைக்கு ஆயத்தமாகுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- சிறு தொடக்கு, பெருந் தொடக்கு பற்றி அறிந்து கூறுவார்.
- சிறு தொடக்கிலிருந்து நீங்குவதற்காக செய்ய வேண்டியவற்றைச் சொல்லிக் காட்டுவார்.
- தயம்மும், ஜபீரத்திற்குரிய காரணங்களையும், நிறைவேற்றும் முறைகளையும் அறிந்து கூறுவார்.
- வுழு செய்யும் முறையைச் செய்து காட்டுவார்.
- தயம்மும் செய்யும் முறையினைச் செய்து காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- ''வுழுச் செய்யும் ஒருவர் வுழுவின் உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் கழுவும் போது அவற்றிலிருந்து வுழுச் செய்த நீர் வடியும் போதே அவ்வுறுப்புக்களால் செய்யப்பட்ட பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன'' (முஅத்தா மாலிக்)

  இந்த ஹதீஸைத் தொடர்புபடுத்திப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- மாணவர்கள் வுழு, தயம்மும், ஜபீரத் பற்றிய தங்களது அனுபவங்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - தொழுகைக்கான முன் ஆயத்தங்களில் வுழு அல்லது தயம்மும் முக்கியமானதாகும்.
  - சிறு தொடக்கு ஏற்பட்டவர் அதனைப் போக்குவதற்கு வுழுச் செய்ய வேண்டும். பெருந் தொடக்கு ஏற்பட்டவர் குளிக்க வேண்டும்.
  - வுழுவுக்குப் பதிலாக சில காரணங்களுக்காக தயம்மும் நிறைவேற்றப்படுகின்றது.
  - ஜபீரத்தின்போது பேணவேண்டிய ஒழுங்கு முறைகள் உள்ளன.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்

  - சிறு தொடக்கு, பெருந்தொடக்கு என்பவற்றிலிருந்து சுத்தமாக இருக்க வேண்டும் என்பது தொழுகையின் சரத்துக்களில் ஒன்றாகும்.
  - வுழு பற்றி குர்ஆன் கூறுகின்றது.
  - வுழுவின்றி தொழுகை, ஸுஜூத், தவாப் என்பவற்றை நிறைவேற்ற முடியாது.

    ''மலம், சலம் போன்ற அசுத்தங்களிலிருந்து தனது உடலை சுத்தப்படுத்திக் கொண்ட ஒருவர், வுழுச் செய்து கொள்ளும் வரை அவரது தொழுகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது'' (புகாரி, முஸ்லிம்)
  - வுழு செய்வதற்கு பரிசுத்தமான நீர்(மாஉன் தஹூர்) பயன்படுத்தப்பட வேண்டும்.
  - வுழுவின் பர்ளான செயற்பாடுகள் ஒழுங்குமுறைப்படி நிறைவேற்றப்பட வேண்டும்.
  - வுழுவின் போது பேணப்பட வேண்டிய ஸுன்னத்தான செயற்பாடுகளும் உண்டு.
  - இஸ்லாம் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வுழுவுடன் இருப்பதை வலியுறுத்தியுள்ளதோடு அதன் சிறப்பு, பயன்பாடுகளையும் கூறியுள்ளது.
  - ''வுழுவின் அடையாளங்களின் காரணமாக மறுமை நாளில் எனது சமூகம் பிரகாசம் பொருந்திய முகங்கள், கைகள், கால்களை உடையவர்களாக அழைக்கப்படுவார்கள். தனது பிரகாசத்தின் அளவை யார் அதிகரித்துக் கொள்ள விரும்புகிறார்களோ அவர் வுழு செய்து கொள்ளட்டும்'' (புகாரி,முஸ்லிம்)
  - வுழுவின் மறுமைப் பயன்கள் போன்று இம்மையிலும் ஆரோக்கியம், தூய்மை, புத்துணர்வு போன்ற பயன்கள் உண்டு.
  - வுழுவை முறிக்கின்ற முப்திலாத்துக்களும் உள்ளன. (உதாரணம்: மலம், சலம் கழித்தல், காற்றுப் பறிதல்)
  - வுழுச் செய்வதற்கோ, குளிப்பதற்கோ நீர் கிடைக்காத போது அல்லது நீரைப் பயன்படுத்த முடியாத போது தயம்மும் செய்ய வேண்டும்

    ''நீர் கிடைக்காத போது பரிசுத்தமான மண்ணை நாடுங்கள். அதைத் தொட்டு உங்கள் முகங்களையும் கைகளையும் தடவிக் கொள்ளுங்கள்''(அந்நிஸா:43)
  - சுத்தமான மண்ணில் இரு கைகளையும் அழுத்தி எடுத்து புறங்கைகளைத் தட்டி தூசு, துகள்களை உதிரச் செய்து அதனைக்

கொண்டு முகத்தையும், இரு கைகளையும் முழங்கை வரை தடவிக் கொள்ளலே தயம்மும் ஆகும்.

- வுழு அல்லது குளித்தல் என்பவற்றுக்குப் பதிலாக தயம்மும் நிறைவேற்றப்படுவதால் வுழு செல்லுபடியாதல் முறிவடைதல் சம்பந்தப்பட்ட சகல சட்டங்களும் தயம்மமுக்கும் பொருந்தும்.
- நீர் இல்லாத போதும் நீரைப் பாவிப்பது நோயை அதிகரிக்கச் செய்யும் நிலையிலும் இருக்கின்ற நீர் குடிப்பதற்கு மாத்திரம் போதும் என்ற நிலையிலும், நீர் தேடும் போது தொழுகை தவறிவிடலாம் எனும் நிலையிலும் தயம்மும் செய்ய முடியும்.
- காயங்களுக்கு போடப்படுகின்ற கட்டு, ஜபீரத் என அழைக்கப்படுகின்றது. உரிய முறைப்படி ஜபீரத் இடப்படாவிட்டால் அதற்காக தயம்மும் செய்தல் வேண்டும். பின்னர் தொழுகையை மீட்டித் தொழுதல் வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 வுழு செய்யும் போது பொதுவாக நிகழக்கூடிய குறைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்யும் வழிமுறைகளை விளக்குங்கள்.

குழு-2 வுழுவின் செயற்பாடுகள் அடங்கிய படங்களை ஒழுங்கு முறையாக ஒட்டுங்கள்.

குழு-3 தயம்மும் பற்றியும், அதனை நிறைவேற்றுவதற்குரிய காரணங்களையும் குறிப்பிட்டுக் காட்டுங்கள்.

குழு-4 தயம்மும் செய்யும் முறையினை எழுதிச் செய்து காட்டுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

தயம்மும் செய்வதற்கு அவசியமான சந்தர்ப்பங்களை தாயுடன் கலந்துரையாடி தயம்முமின் செயற்பாடுகளை எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 : சிறு தொடக்கு பெருந்தொடக்கு ஆகியவற்றிலிருந்து நீங்கி தொழுகைக்கு ஆயத்தமாகுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- இஸ்லாம் உடற் சுத்தத்திற்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை அறிந்து ஒழுகுவார்.
- குளிப்பின் விதிமுறைகளை அறிந்து பின்பற்றுவார்.
- குளிப்பின் வகைகளை அறிந்து நிறைவேற்றுவார்.
- பெருந்தொடக்கின் போது செய்யக் கூடாத காரியங்களிலிருந்து தவிர்ந்து கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**
- ''நிச்சயமாக அல்லாஹ் (பாவத்தை விட்டு) வருத்தப்பட்டு மீளுகின்றவர்களையும், பரிசுத்தவான்களையும் விரும்புகிறான்'' (பகரா:222)
- ''சுத்தம் ஈமானின் பாதியாகும்'' (அஹ்மத்) இவற்றைக் காட்சிப்படுத்தி பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - இஸ்லாம் எல்லா விவகாரங்களிலும் சுத்தத்தை வலியுறுத்துகின்ற மார்க்கமாகும்.
    - உடற் சுத்தத்திற்கும் இஸ்லாம் முக்கியத்துவமளிக்கின்றது.
    - முஸ்லிமானவன் பெருந்தொடக்கிலிருந்து நீங்கி சுத்தமாக இருக்க வேண்டும்.
    - இஸ்லாம் பல்வேறு காரணங்களுக்காக குளிப்பதை விதந்துரைத்துள்ளது.

**படி 2 :**
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3 :**
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்
    - உடல், உடை, இடச் சுத்தத்திற்கு இஸ்லாம் முக்கியத்துவமளிக்கின்றது.
    - உடலின் ஆரோக்கியம், அதன் தூய்மை, அழகு என்பவற்றுக்கு இஸ்லாம் முக்கியத்துவமளித்துள்ளது.

      ''நீங்கள் குளிப்பு கடமையானவர்களாக இருந்தால் குளித்து உடல் முழுவதையும் சுத்தம் செய்து கொள்ளுங்கள்''(அல் மாஇதா :6)

      ''எனது உம்மத்தினருக்கு சிரமம் ஏற்படாது என்றிருந்தால் ஒவ்வொரு தொழுகைக்கும் மிஸ்வாக் செய்யும்படி அவர்களை நான் ஏவியிருப்பேன்''(முஸ்லிம்)
    - பெருந்தொடக்கு என்பது குளிப்பு கடமையாகியுள்ள சந்தர்ப்பமாகும்.
    - குளிப்பதற்கு மாஉன் தஹுூரைப் பயன்படுத்த வேண்டும். நீரைப் பயன்டுத்த முடியாத போது அதற்குப் பகரமாக தயம்மும் செய்ய வேண்டும்.
    - ஸுன்னத்தான குளிப்புகளும் உண்டு. உதாரணமாக வெள்ளிக்கிழமை ஜும்மாவுக்குச் செல்வதற்காக குளித்தல், இரு பெருநாள் தொழுகைகளுக்குச் செல்லுமுன் குளித்தல்.
    - பெருந்தொடக்குடையவருக்கு தொழுதல், தவாப் செய்தல், இஃ. திகாப் இருத்தல் போன்ற காரியங்கள் தடுக்கப்பட்டுள்ளன.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** இஸ்லாம் சுத்தத்திற்கும், குறிப்பாக உடற் சுத்தத்திற்கும் முக்கியத்துவமளித்துள்ளமைக்கான காரணங்களை கலந்தாலோசித்து எழுதுங்கள்.

**குழு-2** குளிப்பின் வகைகளை அட்டவணைப்படுத்தி உதாரணங்களுடன் எழுதுங்கள்.

**குழு-3** பர்ளான குளிப்பை நிறைவேற்ற வேண்டிய ஒழுங்கு முறைகளைக் குறிப்பிட்டு எழுதுங்கள்.

**குழு-4** ஸுன்னத்தான குளிப்புக்களை விளக்கி குளிப்பதனால் ஏற்படும் உடல் நலன்களை பட்டியற்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

குளிப்பதோடு தொடர்புடைய ஒழுங்கு விதிகள் பற்றி பெற்றோருடன் கலந்துரையாடி அதனை நடைமுறைப்படுத்தியமை தொடர்பான குறிப்புகளைப் பேணச் செய்யுங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.3 : தொழுகையின் முக்கியத்துவத்தை அறிந்து தொழுகையைப் பேணிவருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- தொழுகையின் ஆயத்தங்களை அறிந்த கடைப்பிடிப்பார்.
- தொழுகையின் முக்கியத்துவம் மற்றும் சிறப்புக்கள் பற்றி விளக்கிக் கூறுவார்.
- தொழுகையை உயிரோட்டத்துடன் பேணி வருவார்.
- தொழுகையின் முக்கியத்துவம் அறிந்து, தொழுகையின் பால் அழைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- ''மறுமையில் ஒரு மனிதனின் அமல்களைப் பற்றி விசாரிக்கப் படும்போது தொழுகையைப் பற்றியே முதன் முதலாக விசாரிக்கப்படும். அது சீராக அமைந்து விடுமேயானால் ஏனைய அனைத்து வணக்க வழிபாடுகளும் சீராகவே அமையும். அது சீராகவில்லையென்றால் ஏனைய அனைத்தும் சீரற்றதாகவே இருக்கும்.'' (அபூதாவுத்.) என்ற ஹதீஸை ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்; ஏனைய மாணவர்களின் செவிசாய்ப்பை உறுதிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் தொடராக தொழுகின்றார்களா என்பதை அவர்களிடமே கேட்டறியுங்கள்.
- தொடராக தொழுது வரும் மாணவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்துங்கள். தொழுகையில் பொடுபோக்கான மாணவர்களுக்கு அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - தொழுகை இஸ்லாத்தின் இரண்டாவது அடிப்படைக் கடமையாகும். அஸ்ஸலாத் என்பதன் மொழிக் கருத்து 'பிரார்த்தனை' என்பதாகும். மறுமையில் முதல் விசாரணை தொழுகை பற்றியதாகும்.
  - தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்ற வேண்டும்.
  - தொழுகையை உரிய நேரத்தில் தொழுவதன் மூலம் இம்மையிலும் மறுமையிலும் பல அளப்பரிய நன்மைகள் கிடைக்கின்றன.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 : 
- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள். குறை நிரப்புச் செய்து வழிகாட்டுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - தொழுகையைப் பேணித் தொழுவது மிக வலியுறுத்தப்பட்ட ஒவ்வொருவரும் (பர்ளு ஐன்) நிறைவேற்றியாக வேண்டிய கடமையாகும்
    - இஸ்லாமிய கடமைகளில் தொழுகைக்கு இஸ்லாம் வழங்கியிருக்கம் முக்கியத்துவம் போல் வேறெதற்கும் வழங்கவில்லை
    - ஒருவர் இஸ்லாத்தில் இணைந்து விட்ட மறுகணமே அவன் மீது தொழுகை கடமையாகிவிடுகிறது.
    - இஸ்லாமிய வணக்க வழிபாடுகள் அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து ஜிப்ரீல் (அலை) ஊடாகவே நபி ஸல்லல்லாஷஹ அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அறிவித்துக் கொடுக்கப்பட்டது. ஆனால் அல்லாஷஹ தஆலா நபி ஸல்லல்லாஷஹ அலைஹி வஸல்லம் அவர்களை, அல்-இஸ்றா வல்-மி∴றாஜ்' பயணத்தினூடாக ஏழு வானங்களுக்கப்பாலே தொழுகையை வழங்கியது அதன் சிறப்புக்கு தக்க சான்றாகும.
    - நபிஸல்லல்லாஷஹ அலைஹி வஸல்லம் அவர்கள் தனது மரணப் படுக்கையில் வைத்து வலியுறுத்திய முக்கிய அம்சங்களில் தொழுகையும் ஒன்றாகும்.
    - மறுமையில் ஒவ்வொரு மனிதனிடமும் தொழுகை பற்றியே முதன் முதலாக விசாரிக்கப்படும். அது சீராக இருந்து விடுமென்றால் ஏனைய அனைத்து வணக்க வழிபாடுகளும் சீராகவே இருக்கும்.
    - தொழுகை இறையச்சமுள்ள நல்லடியார்களுக்குரிய பிரத்தியேக அடயாளம் என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.
    - ஓர் அடியான் தன் றப்பிடம் கொண்டிருக்கும் அன்பை வெளிப்படுத்துவதற்கும், அவன் தன் மீது சொரிந்திருக்கும் அருட்பேறுகளை நினைத்து நன்றியுடன் நினைவு கூர்வதற்கும் ஒரு வாய்ப்பை தொழுகை வழங்குகிறது.
    - எல்லா வேளையிலும் தொழுகையை கண்டிப்பாக நிறைவேற்றியாக வேண்டும் எனும் இஸ்லாத்தின் கட்டளையே அதன் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறப் போதிய சான்றாகும்.
    - தொழுகையில் பேணுதலாக இருப்பது ஏனைய நல்லமல்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குக் காரணமாக அமைகிறது.
    - தொழுகை மானக்கேடான வெறுக்கத்தக்க காரியங்களை விட்டும் மனிதனைத் தடுக்கிறது. தொழுகை உள்ளத்திற்கு ஒளியையும். முகத்தில் செழிப்பையும். உடலுக்கு உற்சாகத்தையும். உணவில் பரகத்தையும் பெற்றுத் தருகிறது. முஸ்லிம்களுக்கு மத்தியில் அன்பையும் பரஸ்பர உறவையும் ஏற்படுத்திக் கொள்ள தொழுகை உதவுகிறது. இம்மை மறுமையில் ஏற்படுகின்ற துன்பங்களைத் தடுக்கின்ற சக்தி தொழுகைக்கு இருக்கின்றது. அது அடியானுக்கும்

தனது ரப்புக்குமிடையில் தொடர்பை ஏற்படுத்தும் ஊடகமாகும். நற்குணத்திற்கும், முக மலர்ச்சிக்கும், உள அமைதிக்கும் தொழுகை காரணமாக அமைகிறது.

- பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும், அந்தஸ்து உயர்த்தப்படுவதற்கும், நல்லமல்கள் அதிகரிப்பதற்கும் தொழுகை காரணமாக அமைகிறது.
- கஞ்சத்தனம், பதட்டம். போட்டி, பொறாமை, போன்ற உள நோய்களுக்கு தொழுகை பரிகாரமாக இருப்பதைப் போலவே உடல் நோய்களுக்கும் அது பரிகாரமாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடி ஆய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு-1 தொழுகையின் முக்கியத்துவம், சிறப்புக் குறித்துப் பேசும் அல்குர்ஆன் வசனங்களின் மொழிபெயர்ப்பை தர்ஜமதுல் குர்ஆனில் தேடி எழுதுங்கள்.

குழு-2 தொழுகையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நான்கு ஹதீஸ்களை தேடி எழுதுங்கள்.

குழு-3 தொழுகையின் மூலம் கிடைக்கும் இம்மை மறுமை பயன்களைப் பட்டியற்படுத்துகங்கள்.

குழு-4 தொழுகை ஒரு மனிதனை எவ்வாறு ஒழுங்குமிக்க மனிதனாக மாற்றுகின்றது என விபரித்து எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

தொழுகையை தொடராகப் பேணுவதற்கு வீட்டுச் சூழலில் பின்பற்றத் தக்க வழிமுறைகளை எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப் படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.4 : நோன்பு பற்றி அறிந்து நோன்பு நோற்றுவருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நோன்பின் மகத்துவத்தை அறிந்து கூறுவார்.
- ரமழான் ஒரு மனிதனில் ஏற்படுத்தும் தாக்கத்தை விளக்கிக் கூறுவார்.
- பேணுதலாக நோன்பு நோற்று பாவங்களிலிருந்து தவிர்ந்து வாழ்வார்.
- ரமழானில் செய்யப்படும் நற்செயல்களை அதிகப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- ''ஒவ்வொரு நன்மையும் அது போன்ற பத்து மடங்கு முதல் எழுநூறு மடங்குகளுக்கு நிகரானது. நோன்பு எனக்குரியது. அதற்கு நானே கூலி வழங்குவேன். நோன்பு நரகிலிருந்து காக்கும் கேடயமாகும் என்று உங்கள் இறைவன் கூறுகின்றான் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்'' (முஸ்லிம்)

  இந்த ஹதீஸ் குத்ஸியை தாமாக முன்வந்து வாசிக்கும் மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.
- வாசிக்கப்பட்ட ஹதீஸின் தொடர்பாக வினவி மாணவர்களின் கருத்துக்களைப் பெறுங்கள்.
- பின்வரும் அம்சங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஒவ்வொரு முஸ்லிமும் ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது கடமை (பர்ள்) ஆகும். இது ஹிஜ்ரி 02 ஆம் ஆண்டு கடமையாக்கப்பட்டது.
  - நோன்பு மாதத்தில் அனைத்து நற்செயல்களுக்கும் ஏனைய காலங்களை விட பல மடங்கு நன்மைகளை வழங்குவதாக அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான்.
  - ரமழானில் நோற்கப்படும் நோன்புக்கு இறைவன் மகத்தான கூலிகளைத் தருவதாக வாக்களித்துள்ளான். அவ்வாறே ரமழானில் மேற்கொள்ளும் ஏனைய அமல்களுக்கும் இறைவன் அதிக கூலியை வழங்குவதாக வாக்களித்துள்ளான்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3 :
- கலந்துரையாடிப் பெற்ற கருத்துக்களை வகுப்பில் சமர்ப்பிக்க ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களுக்கும் தமது கருத்துக்களை முன்வைக்க இடமளியுங்கள்.
- குறைநிரப்புச் செய்து வழிப்படுத்துங்கள்.

- பின்வரும் அம்சங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - மனிதன் இறையச்சமுள்ளவனாக மாற வேண்டும் என்ற நோக்கிலேயே அல்லாஹ் நோன்பைக் கடமையாக்கியுள்ளான். அல்குர்ஆன் நோன்பு கடமையாக்கப்பட்டது தொடர்பாக கூறும்போது தக்வாவை பிரதானப்படுத்துகிறது. (2: 183)
  - ''ஒருவர் இறை நம்பிக்கையுடனும் மறுமையின் நற்கூலியைப் பெறுகின்ற எண்ணத்துடனும் ரமழான் மாதத்தின் நோன்புகளை நோற்பாராயின் அவர் முன்னர் செய்த பாவங்களை அல்லாஹ் மன்னித்து விடுவான்'' (புகாரி, முஸ்லிம்)
  - எனவே பசித்திருப்பது மாத்திரம் பூரண நோன்பாக அமையாது. மனிதனின் உடலும் உள்ளவும் பூரணமாகக் கட்டுப்பட்டிருக்கும் போதே இறையச்சம் உருவாகும். பொய் சொல்வதை விட்டும், தீய செயல்களை விட்டும் ஒருவரை நோன்பு தடுக்கவில்லையாயின் அது நோன்பாகாது என நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.
  - நோன்பாளிகளுக்கு அளப்பரிய நன்மைகளை அல்லாஹ் வாக்களித்துள்ளான்.
  - ''சுவர்க்கத்தில் அர்ரய்யான் எனப்படும் ஒரு வாயில் உண்டு. நோன்பாளி கள் மாத்திரமே மறுமையில் அதனூடாக நுழைவர். அவர்களைத் தவிர வேறு எவரும் அதனூடாக நுழைய மாட்டார்கள்.'' (புகாரி, முஸ்லிம்)
  - யார் நம்பிக்கை கொண்டு, நன்மையை எதிர்பார்த்து ரமளான் மாதம் நோன்பு நோற்பாரோ அவரது முன் பாவங்கள் மன்னிக்கப்படும். (புகாரி)
  - வயோதிபர்கள், நோயாளிகள், பயணிகள், மாதவிடாய் ஏற்பட்ட பெண்கள், கற்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் முதலானவர்களுக்கு நோன்பு நோற்பதிலிருந்து சலுகை வழங்கப்பட்டுள்ளது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 நோன்பின் ஏனைய அடிப்படைக் கடமைகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது எனப் பட்டியல்படுத்துங்கள்.

குழு-2 நோன்பின் மூலம் கிடைக்கும் நன்மைகளைக் கலந்தரையாடி எழுதுங்கள்.

குழு-3 நோன்பின் மூலம் ஒருவரிடம் ஏற்பட வேண்டிய மாற்றங்களை எழுதுங்கள்.

குழு-4 நோன்பாளிக்கு அல்லாஹ் வழங்கியுள்ள வாக்குறுதிகளைப் பட்டியற்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

ரமழான் மாதமொன்றில் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய நல்லமல்களின் பட்டியலொன்றைத் தயாரித்து எதிர்வரும் ரமழானின் போது அவற்றைக் கடைப்பிடிக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.5 : துஆக்களையும், திக்ர்களையும் அறிந்து அவற்றை ஓதி வருவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- ''துஆ'', ''திக்ர்'' பற்றி அறிந்து கூறுவார்.
- பிரார்த்தனையும் இபாதத்தாகும் என்பதனை அறிந்து செயற்படுத்துவார்.
- பொதுவான துஆக்களையும், சந்தர்ப்ப துஆக்களையும் அறிந்து ஓதி வருவார்.
- இறை நினைவுடன் வாழ்வது (திக்ர்) முஸ்லிமின் கடமை என்பதை அறிந்து ஒழுகி வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- ''(நபியே!) உங்கள் மனதிற்குள் மிகப் பணிவோடும் உரத்த சப்தமின்றி பயத்தோடும் மெதுவாகவும் காலையிலும் மாலையிலும் உங்கள் இறைவனை நினைவு செய்து கொண்டிருங்கள்! அவனை மறந்தவர்களில் நீங்கள் ஆகிவிடாதீர்கள்.'' (அல் அஃராப் :205) என்ற அல்குர்ஆன் வசனத்தைக் காட்சிப்படுத்திப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - துஆ என்பது அல்லாஹ்விடம் மாத்திரம் வேண்டிப் பிரார்த்திப்பதைக் குறிக்கின்றது.
  - பிரார்த்தனை ஓர் இறைவணக்கமாகும்.
  - பிரார்த்தனைக்கு ஒழுங்கு விதிகள் இருக்கின்றன.
  - இறை நினைவுடன் இருத்தல் ''திக்ர்'' ஆகும்.
  - இறை நினைவுடன் வாழ்வதற்கு ஒழுங்குகள் உள்ளன.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்
    - வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு தேவைகளுக்காக அல்லாஹ்விடம் மாத்திரம் பிரார்த்திப்பது இஸ்லாத்தின் பார்வையில் இபாதத்தாகும். ''பிரார்த்தனையே இபாதத்தாகும்''(அபூதாவுத்)
    - பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்பட சில நிபந்தனைகள் உள்ளன.
        - அல்லாஹ் துஆவுக்கு பதிலளிப்பான் என்ற நம்பிக்கையும், அல்லாஹ்விடம் மாத்திரமே பிரார்த்தித்தலும்.
        - எல்லா விவகாரங்களிலும் ஹலாலைப் பேணுதல்.
        - நல்ல காரியங்களுக்காகப் பிரார்த்தித்தல்.
        - பிரார்த்தனையின் பதிலுக்காக அவசரப்படாதிருத்தல்.
        - உறவுகளைத் துண்டிக்காதிருத்தல்.
    - இஸ்லாம் பிரார்த்திப்பதற்கான ஒழுங்குகளைக் கற்றுத் தந்துள்ளது.
        - பிரார்த்திக்கு முன் அல்லாஹ்வைப் புகழ்தல், ஸலவாத்துச் சொல்லுதல்.
        - பாவமன்னிப்பாக இருந்தால் பாவத்திற்காக வருந்துதல்.
        - விருப்புடனும், இஹ்லாஸுடனும் மன்றாடிப் பிரார்த்தித்தல்.
        - நற்செயல்களை முன்னிறுத்திக் கேட்டல்.
        - வுழுவுடனும், தூய்மையுடனும், அமைதியாக கிப்லாவை முன்னோக்கி பணிவுடன் பிரார்த்தித்தல்.
        - பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படும் இடம், சந்தர்ப்பம், நேரம் என்பவற்றை அனுசரித்துப் பிரார்த்தித்தல்.
    - துஆக் கேட்பதால் பல்வேறு பயன்களும் கிட்டுகின்றன.
    - முஸ்லிம் இறை நினைவை எந்நேரமும் உள்ளத்தில் கொண்டவனாக உலகில் வாழ முயல வேண்டும்.

      ''விசுவாசிகளே! அல்லாஹ்வை நீங்கள் அதிகமாக நினைவு கூறுங்கள். காலையிலும் மாலையிலும் அவனைத்துதி செய்யுங்கள்'' (அல் அஹ்ஸாப் : 41-42)

      ''தனது இரட்சகனை ஞாபகப்படுத்துபவனும், ஞாபகப்படுத்தாதவனும் உயிருள்ளவனையும், இறந்தவனையும் போன்றவர் ஆவார்''. (புஹாரி)

      ''விசுவாசிகளே! உங்களது செல்வங்களோ, பிள்ளைகளோ அல்லாஹ்வை நினைவு கூறுவதை விட்டு உங்களைப் பராக்காக்கி விட வேண்டாம்''. (அல் முனாபிகூன் : 9)
    - திக்ர் கல்பி, திக்ர் லிஸானி என திக்ர் இரு வகைப்படும்.

      உள்ளத்தில் இறை நினைவைப் பசுமையாக வைத்திருத்தல் திக்ர் கல்பியாகும். நாவினால் அல்லாஹ்வை ஞாபகப்படுத்தும் வாசகங்களை மொழிதல் திக்ர் லிஸானியாகும். இச்சந்தர்ப்பத்தில் இறை நினைவை உள்ளத்தில் கொண்டு வந்தே மேற்கொள்ளல் வேண்டும்.

- இரண்டு திக்ர் வகைகளுக்கும் ஏற்றவாறு அவ்ராதுகள், திக்ருகள், துஆக்கள், வணக்க வழிபாடுகள் இஸ்லாத்தில் வழங்கப்பட்டுள்ளன.
- அடிப்படை வணக்கங்களை நிறைவேற்றல், திலாவத்துல் குர்ஆன், சந்தர்ப்ப துஆக்கள், எந்நேரமும் ஓதிவரத்தக்க துஆக்கள், தவ்பா, ஸலவாத்து, பிரார்த்தனைகள் என்பன இறை நினைவுடன் வாழ வழி செய்கின்றன.
- வீட்டினுள் நுழைதல், வெளியேறுதல், உண்ணல், உடுத்தல், ஆடை களைதல், உறங்குதல், விழித்தெழல் எனப் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஓத வேண்டிய துஆக்களை இஸ்லாம் கற்றுத்தந்துள்ளது.
- இறை நினைவுடன் வாழ்வது ஈருலக வாழ்விலும் பல்வேறு நன்மைகளை ஈட்டித்தரும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 துஆ, திக்ர் பற்றிய இஸ்லாத்தின் போதனைகளைக் கண்டறிந்து எழுதுங்கள்.

குழு-2 பிரார்த்தனையின்போது கடைப்பிடிக்க வேண்டிய ஷர்த்துக்கள், ஒழுங்குகளை பட்டியற்படுத்தி எழுதுங்கள்.

குழு-3 தினமும் காலை, மாலை ஓதும் திக்ர்களை பட்டியற்படுத்துங்கள்.

குழு-4 தினமும் காலை, மாலை ஓதிவர வேண்டிய அல்குர்ஆன் ஸூராக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் ஓதக்கூடிய துஆக்களை வீட்டில் பொருத்தமான இடங்களில் காட்சிப்படுத்தி அவற்றை நாளாந்தம் ஓதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 : நல்ல நட்பினூடாக வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- நட்பின் ஆன்மிக லௌகீகப் பயன்களைக் கண்டறிந்து கூறுவார்.
- நட்பு ஒருவனில் செல்வாக்குச் செலுத்தும் விதம் பற்றிக் கூறும் ஹதீஸ்களையேனும் விளக்குவார்.
- நல்ல நண்பனிடம் காணப்பட வேண்டிய பண்புகளை அடையாளம் கண்டு கூறுவார்.
- தீய நட்பினால் ஏற்படும் பாதகங்களைப் பட்டியற் படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- ‘‘அல்லாஹ்வுக்காக நேசிக்கும் இரு சகோதரர்களில் மிகச் சிறந்தவர் யாரெனில் அவர்களில் மற்றவரை மிக அதிகமாக நேசிப்பவரே’’ (அதபுல் முரத்) என்ற ஹதீஸை கூறி இந்த ஹதீஸின் மூலம் பெற முடியுமான படிப்பினைகளை மாணவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் கருத்துக்களை வெளிக்கொண்டு வந்து பாடப் பிரவேசம் செய்யுங்கள்.
- நட்பு பற்றிய மாணவர்களின் அனுபவங்களை கேட்டறியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - இஸ்லாம் மனிதர்கள் தமக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளும் நட்புக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கின்றது.
    - நட்பு, ஒருவனில் அதிக தாக்கம் செலுத்தும் ஓர் அம்சமாகும்.
    - நபி (ஸல்) அவர்கள் தூய நட்புக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்கள்.
    - எமது நண்பனை நேசிப்பது போன்று மறுமையில் எமக்கு நண்பனாக வந்து நிற்கக் கூடிய நற்செயல்களை நேசிக்க வேண்டும்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்
    - ''அல்லாஹ்வுக்காக நேசம் கொள்ளும் இரு மனிதர்களுக்கு நிழலே இல்லாத அந்நாளில் நிழல் கிடைக்கும்'' (புகாரி)
    - என்னுடைய மாட்சிமை மீது அன்பு செலுத்துபவன் வேறு நிழலேதும் இல்லாத மறுமை நாளில் என்னுடைய அர்ஷின் நிழலில் இருப்பான் (அஹ்மத்)
    - ஓர் அடியானை அல்லாஹ் நேசிக்கும் போது ஜிப்ரீல் (அலை) அவர்களை அவன் அழைத்து நான் இன்னாரை நேசிக்கிறேன் நீங்களும் அவனை நேசியுங்கள் என்று கூறுவான். எனவே அவரை ஜிப்ரீலும் நேசித்துவிட்டு விண்ணகத்தில் வசிப்பவர்களை அழைத்து அல்லாஹ் இன்னவரை நேசிக்கிறான் நீங்களும் அவரை நேசியுங்கள் என ஜிப்ரீல் (அலை) அறிவிப்பார். உடனே விண்ணகத்தார் அவரை நேசிப்பார்கள். பிறகு அவருக்குப் பூமியில் வசிப்போரிடமும் அங்கீகாரம் கிடைக்கும் (புகாரி)
    - நண்பர்களுக்கு இடையே இருக்க வேண்டிய குணாம்சங்களை இஸ்லாம் அடையாளப்படுத்தியுள்ளது.
        - அல்லாஹ்வுக்காக நேசித்தல்
        - ஸலாத்தை பரிமாறுதல்
        - விட்டுக் கொடுத்தல்
        - தனது நட்பை நண்பரிடம் எடுத்துக் கூறுதல்
        - நண்பனை அதிகமாக நேசித்தல்
        - பரிசில்களைப் பரிமாறிக் கொள்ளல்
        - பொறுமையுடன் தவறுகளை மன்னித்து நடத்தல்
        - நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல்
    - நட்பு ஒருவனில் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் தாக்கம் செலுத்தும் ஒன்றாகும்.
    - மனிதன் தனது நண்பனின் மார்க்கத்தில் இருக்கிறான். எனவே தான் யாருடன் நட்புக் கொண்டிருக்கிறேன் என்பது குறித்து ஒவ்வொரு மனிதனும் நன்கு கவனமாக இருக்க வேண்டியது அவசியமாகும். (அபூதாவூத்)
    - நல்ல நண்பனுக்கும் கெட்ட நண்பனுக்கும் உதாரணம் கஸ்தூரி வியாபாரியையும் கொல்லனையும் ஒத்ததாகும். கஸ்தூரி வியாபாரி உம்மீது அதனைத் தடவி விடலாம். அல்லது அதில் இருந்து கொஞ்சம் நீ வாங்கிக் கொள்ளலாம். அல்லது அதன் நறுமணத்தையாவது நீ நுகரலாம். கொல்லனின் சூளையில் இருந்து வரும் தீப்பொறிகள் உனது ஆடையை எரித்து விடலாம். அல்லது அதன் புகை உன் மூக்கைத் தொலைக்கலாம். (புகாரி)
    - நாம் நல்லோரை நேசித்து அவர்களுடன் நட்புப் பூண்டால் அவர்களே எம்முன் மறுமையில் நிற்பார்கள். நாம் ஏனையோரை

நேசித்து அவர்களை எமது நண்பர்களாக்கிக் கொண்டால் அவர்களே எம்முன் மறுமையில் நிற்பார்கள்.

- "ஒருவரின் ஒழுக்க நிலையை அறிய விரும்பினால் அவருடைய நண்பனின் ஒழுக்க நிலையை அறிந்து கொள்ளுங்கள்" (பழமொழி)
- நாம் அல்குர்ஆனையும் நல்ல நூல்களையும் நேசிக்கப்பழக வேண்டும். ஏனெனில் இவையும் நல்ல நண்பர்கள் போன்று ஆபத்தில் கை கொடுப்பவைகளாகும்.
- நபி (ஸல்) அவர்கள் தனது சஹாபாக்களுடன் முன்மாதிரிமிக்க நண்பனாக நடந்து காட்டியதால் ஸஹாபாத் தோழர்களும் தூய நட்புடன் வாழ்ந்த வாழ்வு, பின்வந்தவர்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** நட்பினால் கிடைக்கும் ஆன்மிக, லௌஹீகப் பயன்கள் ஐந்தைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-2** ஒருவர் தனது நண்பன் விடயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய இஸ்லாமிய நெறிமுறைகள் பற்றி கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-3** தீய நட்பினால் ஏற்படும் ஆபத்துக்கள் ஐந்தைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-4** நல்ல நட்பை வளர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள் யாவை எனக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

நபி (ஸல்) அவர்கள், ஸஹாபாக்களுடன் நட்புக் கொண்டதற்கு ஆதாரமான ஒரு நிகழ்வைப் பெற்றோருடன் கலந்துரையாடி எழுதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2 : உதவி தேவைப் படுவோர்க்கு உதவி செய்வார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- அல்லாஹ் எல்லாப் படைப்புக்களையும் ஏனையவற்றின் உதவியில் தங்கி வாழும் நிலையிலேயே படைத்துள்ளான் என்பதை உணர்ந்து செயற்படுவார்.
- சமூகத்தில் அதிகம் உதவி செய்யப்பட வேண்டியவர்கள் யாவர் என்பதை இனங்கண்டு கூறுவார்.
- பிறருக்கு உதவும் வழிமுறைகளை அடையாளப்படுத்துவார்.
- நாம் பிறருக்கு உதவும் போது அல்லாஹ் எமக்கு உதவுவான் என்ற நம்பிக்கையுடன் செயற்படுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- ''ஓர் அடியான் தனது சகோதரனுக்கு உதவும் காலமெல்லாம் அல்லாஹ் அவ்வடியானுக்கு உதவுபவனாக உள்ளான்'' என்ற ஹதீஸை காட்சிப்படுத்தி அதன் மையக் கருத்தை வலியுறுத்துவதனூடாக பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- பிறருக்கு உதவி செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களை மாணவர்களின் மூலமாக வெளிக்கொண்டு வாருங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - அல்லாஹ் எல்லா உயிரினங்களையும் பிறரில் தங்கி வாழும் நிலையிலேயே படைத்துள்ளான்.
    - சமூகத்தில் அதிகம் தேவையுடையோராய் மூத்தோர்களும், சிறியோர்களும், நலிவுற்றோரும் காணப்படுகின்றனர்.
    - நாம் பிறர் தேவையை நிறைவேற்றும் போது அல்லாஹ் எமது தேவையை நிறைவேற்றுகிறான்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 : • ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்
    - ஒவ்வொரு மனிதனும் பிற உயிர்களுக்கு உதவும் மனப்பாங்குடையோராய் வாழ வேண்டும்.
    - உறவினர்களுக்கும் ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் அவர்களது உரிமைகளைக் கொடுத்து வாருங்கள் (அல் இஸ்ரா : 26)
    - நபி (ஸல்) அவர்கள் தனது பகைவர்க்கும் உதவி செய்பவர்களாக இருந்தார்கள்.
    - பிற மனிதர்க்கு உதவி செய்வதன் அவசியத்தை நபியவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.
        - உன் சகோதரன் அநியாயம் செய்தவனாயினும் அல்லது அநியாயத்திற்குட்பட்டவனாயினும் உதவி செய்யுங்கள்.
        - மனிதர்களில் சிறந்தவர் மக்களுக்கு அதிகம் பிரயோசனப்படுபவனே
    - தனது நலன்களைப் போன்றே பிறர் நலனிலும் அக்கறை காட்டுதல் ஈமான் சார்ந்த ஒரு விடயமாகும்.
        - ''உங்களில் ஒருவர் தான் விரும்புவதையே தனது சகோதரனுக்கும் விரும்பாதவரை ஈமான் கொள்ளமாட்டார்'' (புஹாரி)
    - இஸ்லாத்தின் பார்வையில், மக்கள் தலைவனாகத் தகுதி பெற்றவர் மக்களுக்கு அதிகம் உதவி செய்பவரே
    - ''மக்களின் தலைவர் அவர்களுக்கு அதிகம் பணிவிடை செய்பவனே''
    - உள்ளத்தில் இருக்கும் அன்பின் வெளிப்பாடாகவே மனிதன் பிறர்க்கு உதவுகின்றான்.
    - நாம் சமூகத்தில் உள்ள முதியோர் சிறியோர் தேவைகளை இனங்கண்டு அவர்களுக்கு அதிகம் உதவுவோராய் இருக்க வேண்டும்.
    - முதுமை ஏற்படும் போது எந்த ஒரு மனிதனும் பலவீனம் அடைந்து பிறரில் தங்கி வாழ்வோராகின்றனர்.
    - நாம் முதியோரின் தேவைகளை நிறைவு செய்து கொடுத்து அவர்களுக்கு உதவியாய் திகழ வேண்டும்.
    - சிறியவர்களும் அதிகம் தேவையுடையவர்களாவர். எனவே அவர்களுக்கும் நாம் உதவி புரிவோராய் இருக்க வேண்டும்.

- ''உங்களில் சிறியோருக்கு இரக்கம் காட்டாதவரும் பெரியோருக்கு மரியாதை செய்யாதவரும் எம்மில் உள்ளவர் அல்லர்''
- நலிவுற்றவர்களும் அதிகம் கவனிக்கப்பட வேண்டியவர்களாவர்.
- அங்கவீனர்கள், பார்வையற்றோர், காது கேட்காதோர், பேச முடியாதோர், முடமானோர், நோயாளிகள், புத்தி குறைவானோர் முதலானோர் நலிவுற்றவர்களாவர்.
- நலிவுற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதும் அவர்களது தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதும் நபியவர்களின் முன்மாதிரியாகும்.
- முதியோரையும், சிறியோரையும் நலிவுற்றோரையும் எமது வீடுகளிலும் பொது இடங்களிலும் நாம் சந்திக்க நேரிடும் போது இன மத பேதங்களை மனதிற் கொள்ளாது அவர்களுக்கு உதவ முன்வருவது நபியவர்கள் காட்டிய முன்மாதிரியாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 பிறருக்கு உதவி செய்வதன் அவசியத்தை வலியுறுத்தும் நான்கு ஹதீஸ்களை தேடி எழுதுங்கள்.

குழு-2 உங்களது பாடசாலையில் உள்ள தேவைப்பட்டோரை இனம் கண்டு உங்களால் செய்ய உத்தேசித்துள்ள உதவிகளைப் பட்டியற்படுத்துங்கள்.

குழு-3 முதியோருக்கும் சிறியோருக்கும் நாம் செய்ய வேண்டிய உதவிகளை அட்டவணைப்படுத்துங்கள்.

குழு-4 நலிவுற்றோர் பட்டியலொன்றைத் தயாரித்து அவர்களுக்கு எவ்வாறான உதவிகளைச் செய்ய முடியும் என்பதைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

மாணவரது வீட்டுச் சூழிலில் வசித்துவரும் உதவி தேவைப்படும் ஒருவரை இனம்கண்டு, தம் பெற்றோரின் துணையுடன் யாதேனும் ஓர் உதவி செய்ய வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.3 : பிறர் பொருட்களை அனுமதியுடன் பயன்படுத்துவார்.**

**பாடவேளை : 02**

**கற்றல் பேறுகள்:**

- ஒரு பொருளை அதன் உரிமையாளனின் அனுமதியின்றி பயன்படுத்த முடியாது என்பதனை அறிந்து கூறுவார்.
- உரிமையாளன் யார் என்று அறியப்படாத பொருட்கள் தொடர்பில் இஸ்லாத்தின் நிலைப்படைக் கூறுவார்.
- பிறர் வீட்டில் நுழையமுன் அனுமதி பெற வேண்டும் என்பதை விளங்கி ஒழுகுவார்.
- அனுமதி இன்றி ஒருவரது பொருளினைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புக்களைப் பட்டியற்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- ‘‘உரிமையாளனின் அனுமதியின்றி ஒரு பொருளைப் பாவிப்பதால் ஏற்படும் பிரச்சினை ஒன்றைச் சம்பவமாக மாணவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்.
- அச்சம்பவத்தின் மூலம் மாணவர்கள் பெற்ற படிப்பினைகளை கேட்டறிந்து கொள்வதன் மூலம் பாடப் பிரவேசம் செய்யுங்கள்.
- சிறிய ஒரு பொருளாயினும் அதன் உரிமையாளனின் அனுமதியுடனேயே பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை ஆழமாகப் பதிய வையுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஒருவரது பொருளை நாம் அவரது அனுமதி இன்றிப் பயன்படுத்துவது ஹராமாகும்.
  - பாதையில் கண்டெடுத்த ஒரு பொருளைக்கூட நாம் நினைத்த படி பயன்படுத்த முடியாது.
  - அனுமதியுடன் பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் நன்மைகள் ஏற்படுவது போல் அனுமதி இன்றிப் பயன்படுத்துவதில் தீமைகளும் ஏற்படுகின்றன.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்
  - அனுமதி இன்றி மற்றவர்களின் பொருட்களை உபயோகிப்பதில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன.
  - அனுமதியின்றி பிறர் பொருளைப் பயன்படுத்துவது நாகரிகமற்ற ஒரு செயலாகும்.
  - மற்றோரது உரிமையை மீறும் இவ்வாறான செயல்களை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது.
  - சிறிய ஒரு பொருளாயினும் அதனை உரியவரின் அனுமதி பெற்றபின் உபயோகிப்பதே இஸ்லாமியப் பண்பாடாகும்.
  - மற்றவர்களின் பொருளை அனுமதி இன்றி உபயோகித்து அதை அவருக்குப் பின்னராவது அறிவிக்காமல் இருப்பது திருட்டுக்கு ஒப்பானதாகும்.
  - அனுமதி இன்றி ஒருவரது வீட்டில் நுழைவதைக் கூட இஸ்லாம் தடுத்துள்ளது.

    ''விசுவாசம் கொண்டோரே! உங்கள் வீடுகள் அல்லாத வேறு வீடுகளில் (நீங்கள் நுழைய அவசியம் ஏற்பட்டால் அவ்வீடுகளில் உள்ளவர்களிடம் நீங்கள் (மூன்று முறை) அனுமதி கோரி அவ்வீடுகளில் உள்ளோருக்கு ஸலாம் கூறாத வரை (அவற்றில்) நுழைய வேண்டாம்'' (அந்நூர் : 58)
  - நாம் ஒரு பொருளைக் கண்டெடுத்தால் அதை அது இருந்த இடத்திலேயே விட்டு விட வேண்டும். அல்லது உரிமையாளனை கண்டு பிடித்து ஒப்படைக்க வேண்டும். அதனைப் பயன்படுத்தும் உரிமை எமக்குக் கிடையாது.
  - நாம் பயன்படுத்தும் பொருள் பொதுச் சொத்தாயின் அவற்றை அவற்றுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டோரிடம் அனுமதி பெற்றே உபயோகிக்க வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** உரிமையாளரின் அனுமதி இன்றி நாம் பொருட்களைப் பயன்படுத்தும் போது ஏற்படும் பிரதிகூலங்களை எழுதுங்கள்.

**குழு-2** உரிமையாளரின் அனுமதி பெற்றுப் பயன்படுத்தும் போது ஏற்படும் அனுகூலங்களை எழுதுங்கள்.

**குழு-3** பாடசாலையில் பாதுகாக்கப்படும் பொருட்களையும் நாம் அவற்றைப் பயன்படுத்துவதற்கு அனுமதி பெற வேண்டிய அதன் பொறுப்பாளர்களையும் கொண்ட ஒரு அட்டவணையைத் தயாரியுங்கள்.

**குழு-4** அனுமதியின்றி பிறர் வீட்டில் நுழைவதால் ஏற்படும் பாதிப்புக்களைக் கலந்துரையாடிப் பட்டியற்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

பிறர் பொருட்களை அனுமதியுடன் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து குடும்பத்தவர்களுடன் கலந்துரையாடலொன்றை நடத்த வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1 : நான்கு வேதங்களையும் அறிந்து அல் குர்ஆனை மகத்துவப்படுத்துவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நபிமார்களுக்கு வழங்கப்பட்ட நான்கு வேதங்களின் பெயர்களை அவற்றின் மொழிமூலத்துடன் முறையாகக் குறிப்பிடுவார்.
- அருளப்பட்ட அனைத்து வேதங்களும் முன்வைத்த வணக்கத்துக்குரியவன் பற்றிய எண்ணக்கருவை குறிப்பிடும் குர்ஆன் வசனங்களை மனனமிட்டு ஓதுவார்.
- வேதங்களில் இறுதியானது குர்ஆன் என்பதனை நம்பிக்கையில் இருத்திக் கலந்துரையாடுவார்.
- குர்ஆனின் புனிதத்தையும் அதன் மகத்துவத்தையும் அறிந்து செயற்படுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :

- நான்கு வேதங்கள் வழங்கப்பட்ட நபிமார்கள் மற்றும் அவை வழங்கப்பட்ட மொழிகள் தொடர்பான பாடலை மாணவர்களிடம் பாடிக்காட்டி பாடத்தில் பிரவேசியுங்கள்.

  தௌராத் மூஸா அபரானி ஸபூர் தாவூத் யூனானி

  இன்ஜீல் ஈஸா ஸுர்யானி புர்கான் முஹம்மது அரபானி

- குர்ஆனின் மகத்துவம் பற்றி மாணவர்களிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - அல்லாஹ்வால் நபிமார்களுக்கு வேதங்கள் மற்றும் ஸுஹுபுகள் வழங்கப்பட்டன.
  - அவை அனைத்தும் ‘லாஇலாஹ இல்லல்லாஹ்’ என்ற ஓர்இறைக் கொள்கையையே முன்வைத்தன.
  - இறுதி வேதமாக அல் குர்ஆன் அருளப்பட்டு இஸ்லாம் பூரணப்படுத்தப்பட்டது.
  - குர்ஆனின் வருகையோடு முன்னைய அனைத்தும் வழக்கொழிந்தன.
  - அல்குர்ஆனின் மகிமையை விளங்கி அது காட்டிய வழியில் செயற்படுதல் கட்டாயமானது.

**படி 2** :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்களை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்
  - ஏனைய வேதங்களையும் நபிமார்களையும் நம்புவது ஈமானின் அடிப்படையாகும்.
  - வேதங்களைப் பெறாத நபிமார்கள் ஸுஹுபுகளைப் பெற்றனர். மூஸா (அலை) அவர்கள் வேதத்தையும் ஸுஹுபுகளையும் வழங்கப் பெற்றார்கள்.
  - அல்லாஹ்வால் அருளப்பட்ட அனைத்து வேதங்களும் அல்லாஹ்வைத் தவிர வேறுகடவுளர்கள் இல்லை என்ற கருத்தினை முன்வைக்கின்றன.
  - இறுதி வேதமான அல்குர்ஆன் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இஸ்லாம் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.
  - “இன்றை தினம் நாம் உங்களுக்கு மார்க்கத்தை முழுமையாக்கி வைத்து என்னுடைய அருட்கொடைகளையும் உங்கள் மீது முழுமையாக்கிவிட்டேன்” (அல் மாஇதா : 3)
  - இறுதி நாள்வரை உள்ள மனிதர்களுக்கு நேரான வழியைக் காட்டக்கூடியதாகவும் சகல காலங்களுக்கும் பொருந்தக் கூடியதாகவும் இறுதி வேதமான அல்குர்ஆன் காணப்படுகின்றது.
  - அல்குர்ஆன் உலகில் அதிகம் ஓதப்படும், மனனமிடப்படும் நூலாகக் காணப்படுகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 நான்கு வேதங்கள், அவை வழங்கப்பட்ட நபிமார்கள் மற்றும் அவ்வேதங்கள் அருளப்பட்ட மொழிகள் என்பவற்றை உள்ளடக்கிய அட்டவணை ஒன்றை தயாரியுங்கள்.

குழு-2 அனைத்து நபிமார்களும் அழைப்பு விடுத்த ஓரிறைக் கொள்கை பற்றி அருளப்பட்ட அல் குர்ஆன் வசனங்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

குழு-3 அல்குர்ஆனின் மகத்துவத்தை எடுத்துக் காட்டும் இரண்டு ஹதீஸ்களைத் தேடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

இறுதி வேதமான அல்குர்ஆனின் மகிமை பற்றிக் குறிப்பிடும் அல்குர்ஆன் வசனம் ஒன்றை எழுதி தங்களது கற்றல் அறையில் காட்சிப்படுத்த அறிவுறுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2 : அல்குர்ஆனின் ஸூராக்களை வாசித்து அவற்றின் பொருளைக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஸூரதுல் கத்ரின் பத விளக்கத்தைக் கூறுவார்.
- லைலதுல் கத்ர் இரவின் சிறப்பினை அறிந்து கூறுவார்.
- அல்குர்ஆன் அருளப்பட்ட சிறப்பு மிக்க லைலதுல் கத்ர் இரவின் மகிமை பற்றி மற்றையவர்களுக்கும் எடுத்து விளக்குவார்.
- ஸூரா கத்ரின் பொருளை விளங்கி ஓதி வருவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- ஸூரதுல் கதரை அழகாக ஓதும் ஒரு மாணவனைக் கொண்டு அல்லது ஒலி நாடா மூலம் ஓத வைத்து செவிமடுக்கச் செய்து பாடத்தில் பிரவேசியுங்கள்.
- இந்த ஸூரா வலியுறுத்தும் வசனம் குறித்து வினவிக் கருத்துப் பரிமாறுங்கள்
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஸூரதுல் கத்ர், நபி (ஸல்) அவர்களது மக்கா வாழ்வில் அருளப்பட்ட சிறிய ஸூராக்களில் ஒன்றாகும்.
  - இந்த ஸூரா தனிச் சிறப்புக்கள் கொண்டது.
  - இது குர்ஆன் அருளப்பட்ட நாளான நோன்பின் இறுதி பத்தில் ஒற்றைப்படையாக வரும் லைலதுல் கத்ர் இரவின் சிறப்பு பற்றி குறிப்பிடுகின்றது.
  - அதனை ஓதுவது, மனனமிடுவது, அதன் பொருள் அறிவது கருத்தை செயற்படுத்துவது என்பன நன்மை தரும் செயல்களாகும்.

**படி 2 :**

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத் தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், நிறப் பேனாக்கள் கடதாசிகள் என்பவற்றை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3 :**

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - மக்காவில் வைத்து அருளப்பட்ட ஸூரதுல் கத்ர் லைலதுல் கத்ர் இரவின் சிறப்பை வலியுறுத்தி நிற்கின்றது.
    - ஸூரா முன்வைக்கும் முக்கிய கருத்துக்கள்.
        - அல் குர்ஆன் கண்ணியமிக்க இரவில் அருளப்பட்டது
        - அவ்விரவு ஆயிரம் மாதங்களைவிட சிறப்புமிக்கது
        - அவ்விரவில் மலக்குமார்களும், ஜிப்ரீல் (அலை)அவர்களும் இறங்குவார்கள்
        - விடியல்வரை நீடிக்கும் அவ்விரவானது சாந்தியான இரவாகும்
    - இரண்டு ஸஹாபாக்கள் முரண்பட்டுச் சண்டையிட்டதன் விளைவாக கண்ணியமிக்க லைலதுல் கத்ர் தினத்தை முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் மறக்கடித்தான்.
    - இதனை கடமையாக்கப்பட்ட நோன்பின் இறுதிப் பத்தில் ஒற்றைப்படையான இரவுகளில் தேடிக் கொள்ளும்படி நபியவர்கள் பணித்துள்ளார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** ஸூரதுல் கத்ரின் சிறப்புப் பற்றிய ஒரு ஹதீஸை ஹதீஸ் நூல்களிலிருந்து தேடியெடுத்து மூலத்துடன் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

**குழு-2** ஸூரதுல் கத்ரில் கண்ணியமிக்க இரவு பற்றி கூறப்படுகின்ற விடயங்களை மையப்படுத்தி ஓர் உரையாடலைத் தயாரியுங்கள்.

**குழு-3** ஸூரதுல் கத்ரை அரபியிலும் அதன் பொருளை தமிழிலும் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

லைலதுல் கத்ர் இரவில் பள்ளிவாசலில் நிறைவேற்றக்கூடிய வணக்க வழிபாடுகள் தொடர்பாகப் பெற்றோருடன் கலந்துரையாடி எழுதிவர வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2 : அல்குர்ஆனின் ஸூராக்களை வாசித்து அவற்றின் பொருளைக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஸூரதுல் அலக் முதல் ஐந்து வசனங்களினதும் பதவிளக்கத்தை எடுத்துக் கூறுவார்.
- ஸூரதுல் அலக்கின் சிறப்பினை அறிந்து ஒப்புவிப்பார்.
- இந்த ஸூராவில் அடங்கும் விடயங்களை விளங்கி, பிறருக்கும் விளக்குவார்.
- இந்த ஸூராவின் முதல் ஐந்து வசனங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**
- ஹிரா குகையில் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு முதன் முதலில் குர்ஆன் இறக்கப்பட்ட சம்பவத்தினை ஞாபகப்படுத்தி பாடத்தில் பிரவேசியுங்கள்.
- இந்த ஸூரா எதனைக் குறிப்பிடுகின்றது என்பதை மாணவர்களிடம் வினவிக் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - இவை குர்ஆனில் அருளப்பட்ட முதல் ஐந்து வசனங்களுமாகும்.
    - ஹிரா குகையில் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தனிமையாக இருக்கும் போது வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நேரடியாக இவ்வசனங்களைக் கற்றுக் கொடுத்தார்கள்.
    - முதல் ஐந்து வசனங்களும் கல்வியின் அவசியத்தை வலியுறுத்துகின்றன.
    - மனிதனின் பிறப்பு, மற்றும் அவனுக்குக் கற்றுக் கொடுத்தல், பற்றி பேசுகின்றன.
    - ஸூரா அலக்கினை ஓதுவதும் மனனமிடுவதும் அவற்றின் பொருளை அறிந்து கொள்வதும் சிறந்த செயல்களாகும்.

**படி 2 :**
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத்தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3 :**
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு, முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
  - இந்த ஸூரா அருளப்படுவதற்கு முன்பிருந்தே நபி (ஸல்) அவர்கள் ஹிரா குகைக்கு செல்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்கள்.
  - ''படைத்தவனின் பெயரால் ஓதுவீராக'' என வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் கூற நபி (ஸல்) அவர்கள் ''எனக்கு ஓதத் தெரியாது'' என பதிலளித்தார்கள். பின்னர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபியை கட்டித் தழுவினார்கள்.
  - ஸூரா முன்வைக்கும் முக்கிய கருத்துக்கள்.
    - அனைத்தையும் படைத்த அல்லாஹ்வின் பெயரால் ஓதுதல்
    - மனிதன் ''அலக்'' இலிருந்து படைக்கப்பட்டுள்ளான்.
    - அல்லாஹ் எழுதுகோலைக் கொண்டு மனிதனுக்குத் தெரியாததைக் கற்றுக் கொடுத்தான்
  - அல்லாஹ் மனிதர்களைப் படைத்தவன், அவர்களுக்கு கற்றுக் கொடுத்தவன் எனும் அடிப்படைக் கருத்துக்களை இந்த ஸூரா முன்வைக்கின்றது.
  - அல் குர்ஆனின் முதல் வசனம் கல்வி தொடர்பானதாக இருப்பது இஸ்லாம் கல்விக்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தினை உறுதிப்படுத்துகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு -1** நபி (ஸல்) அவர்கள் ஹிரா குகையில் தனிமையைத் தேடி சென்றதற்கான காரணங்களைத் தேடி எழுதுங்கள்.

குழு -2 நபி (ஸல்) அவர்களுக்கு முதலில் அல் குர்ஆன் வசனங்கள் இறங்கிய சந்தர்ப்பத்தை விளக்குங்கள்.

குழு -3 ஸூரதுல் அலக்கினை அரபியில் எழுதி பொருளை எழுதுங்கள்.

குழு -4 ஸூரதுல் அலக்கின் கருத்தை கலந்துரையாடி விளக்குங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு:**

இஸ்லாம் கல்விக்கு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விதத்தில் பெற்றோரின் துணையுடன் உரையொன்றைத் தயார்படுத்த வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.3 : ஸுன்னாவின் முக்கியத்துவத்தை அறிந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- ஸுன்னா என்பதனை வரையறை செய்வார்.
- ஹதீஸ்களும், முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வாழ்வு முறையும் அல்குர்ஆனுக்கு விளக்கமாகும் என்பதை அறிந்து விளக்குவார்.
- ஸுன்னாவைப் பின்பற்றி தனது சொந்தவாழ்வையும் பொதுவாழ்வையும் அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதனை உணர்ந்து கூறுவார்.
- ஹதீஸ்கள் இரண்டை மனனமிட்டு அது உணர்த்தும் கருத்துப்படி தமது வாழ்வை அமைத்துக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :

- கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஹதீஸை மாணவர் ஒருவரைக்கொண்டு வாசிக்கச் செய்து ஏனையோரை செவிமடுக்கச் செய்து பாடத்தில் பிரவேசியுங்கள்.

  நான் உங்கள் மத்தியில் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கிறேன். அவற்றை இறுகப் பற்றிச் செயற்படுவார்களாயின் என்றுமே வழிதவற மாட்டீர்கள் ஒன்று இறைவேதம் (குர்ஆன்) மற்றையது எனது வழிமுறை (ஸுன்னா) ஆகும். (மாலிக்)

- ஸுன்னா பற்றி மாணவர்களிடம் வினவி கருத்துப் பரிமாறிக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - இஸ்லாத்தின் இரண்டாவது சட்ட மூலாதாரம் ஸுன்னாவாகும்.
  - ஸுன்னா என்பது நபி (ஸல்) அவர்களது சொல், செயல், அங்கீகாரம், பண்புகள், வர்ணனைகள் என்பவற்றைக் குறிக்கின்றது.
  - முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வாழ்வு குர்ஆனுக்கு விளக்கமாக அமைந்திருந்தது.
  - குர்ஆன் கோட்பாடாக இருந்தால் ஸுன்னா அதன் நடைமுறையாகும்.
  - ஸுன்னா மனிதனின் முழு வாழ்க்கைக்கும் வழிகாட்டுகின்றது.

படி 2 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத்தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
  - நபியவர்களின் பணி குர்ஆனின் கருத்துக்கேற்ப வாழ்ந்துகாட்டி அதற்கு ஒரு விளக்கவுரையாக இருந்தது

    “இந்தக் குர்ஆனையும் நபியே நாம் உமக்கு அருளினோம். மனிதர்களுக்காக உன் மீது அருளப்பட்டதை நீர் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் காண்பியும்.”(அல் அன்ஆம்: 44)

    “நபியவர்களின் வாழ்க்கை குர்ஆனாகவே இருந்தது” (முஸ்லிம்)
  - ஸுன்னாவின் வழிகாட்டுதலின் படியே வாழ்க்கையை அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

    “மேலும் நம்முடைய தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் மனமுவந்து எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதனை உங்களுக்குத் தடுத்துக் கொண்டாரோ அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்”. (அல் ஹஷ்ர் : 7)
  - “அவர் தனது விருப்பப்படி எதனையும் பேசவில்லை (அவர் பேசுவதனைத்தும்) அவரின் மீது வஹீயாக அருளப்பட்டவைதாம். சக்தி வாய்ந்த ஓர் ஆசிரியர் அவருக்குக் கற்றுக்கொடுக்கிறார். (அந்நஜ்ம்: 3,4)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 ஸுன்னாவின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் இரண்டு குர்ஆன் வசனங்களைத் தர்ஜமதுல் குர்ஆனில் தேடி அதன் பொருளையும் எழுதுங்கள்.

குழு-2 இரண்டு ஹதீஸ்களை அரபியில் எழுதி அதன் விளக்கத்தையும் எழுதுங்கள்.

குழு-3 ஸுன்னாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி ஓர் உரையைத் தயாரியுங்கள்.

குழு-4 ஸுன்னாவின் முக்கியத்துவத்தை குறிப்பிடும் ஹதீஸ்கள் இரண்டினைக் தேடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

ஸுன்னாவின் முக்கியத்துவத்தால் கிடைக்கப்பெறும் நன்மைகள் குறித்து பெற்றோருடன் கலந்துரையாடி எழுதிக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேர்ச்சி மட்டம் 4.4 : வெட்க உணர்வுடன் நடந்து கொள்வார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- வெட்கம் மனிதனைப் பாதுகாக்கினறது என்பதனை அறிந்து கூறுவார்.
- வெட்கத்துடன் தொடர்பான ஹதீஸ்கள் சிலவற்றை மனனமிட்டு ஒப்புவிப்பார்.
- வெட்கம் ஈமானின் பாதியாகும் என்பதனை உணர்ந்து ஒழுகுவார்.
- வெட்கம் என்ற பண்பில் நபி(ஸல்) அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றி நடப்பதுடன் அதன்பால் பிறரையும் தூண்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஹதீஸை மாணவர் ஒருவரைக்கொண்டு வாசிக்கச் செய்து ஏனையோரை செவிமடுக்கச் செய்து பாடத்தில் பிரவேசியுங்கள்.

  ''ஈமான் எழுபதுக்கும் மேற்பட்ட அல்லது அறுபதுக்கும் மேற்பட்ட கிளைகளாகும். அதில் சிறப்பானது 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற கலிமாவாகும். அதில் தாழ்ந்தது பாதையில் இடையூறு தருபவற்றை அகற்றுவதாகும். வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும்.'' (புஹாரி)

- ஹதீஸ் பற்றி மாணவர்களிடம் வினவி கருத்துப் பரிமாறிக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - வெட்கம் என்ற பண்பின் முன்மாதிரியை நபி(ஸல்) அவர்களிடம் கண்டு கொள்ளலாம்.
  - வெட்கம் மனிதனை இழிவான செயல்களிலிருந்து தடுக்கின்றது.
  - அது மனிதனுக்கும் அவன் வாழும் சமூகத்திற்கும் நன்மையை ஏற்படுத்துகின்றது.
  - ஈமானின் பாதியான வெட்கத்தை நாம் எமது வாழ்வில் கடைப்பிடித்தல் வேண்டும்.

**படி 2 :**

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவையும் குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3 :**

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - நபி(ஸல்)அவர்கள் அதிக வெட்கம் உடையவர்களாக இருந்தார்கள்.

      வெட்கம் என்பது சம்பூரணமான நற்பண்பாகும் (முஸ்லிம்)

      ''நபி (ஸல்) அவர்கள் திரைக்குள் இருக்கும் கன்னிப் பெண்ணைவிடவும் அதிக வெட்கமுடையவர்களாக இருந்தார்கள். அவர்களுக்குப் பிடிக்காத ஏதேனும் ஒரு காரியத்தைக் கண்டால் அதை அவர்களது முகத்தில் நாம் தெரிந்து கொள்வோம்.'' (புகாரி)
    - தனது செயல்களின் வெளிரங்கத்தைப் பார்த்து மனிதர்கள் விமர்சனம் செய்வார்கள் என்பதை விட, தனது ரகசியங்களை அல்லாஹ் முற்றிலும் உற்றுநோக்கிக் கொண்டு இருக்கிறான் என்ற உணர்வால் ஏற்படுவதே வெட்கமாகும்.
    - அல்லாஹ் ஒரு மனிதனை அழிக்க நாடினால் அந்த மனிதனிடமிருந்து வெட்கத்தை எடுத்துவிடுகிறான். வெட்கத்தை இழந்துவிட்ட மனிதன் வெறுக்கத்தக்க மனிதனாக ஆகிவிடுகிறான் ..... (இப்னு மாஜா)
    - ''வெட்கம் நன்மையைத்தான் தரும்'' (புஹாரி, முஸ்லிம்)

      ''ஈமானும் வெட்கமும் ஒன்றோடொன்று இணைந்ததாகும். ஒன்று போய்விட்டால் அடுத்ததும் இல்லாது போய்விடும்'' (ஹாக்கிம்)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 வெட்கத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் இரண்டு ஹதீஸ்களை தேடி அதன் பொருளையும் எழுதுங்கள்.

குழு-2 ''வெட்கம் மனிதனைப் பாதுகாக்கினறது'' என்ற தலைப்பில் தகவல்களைத் திரட்டி எழுதுங்கள்

குழு-3 முஸ்லிம்களின் வெட்க உணர்வுக்கும் காபிர்களின் வெட்க உணர்வுக்கும் இடையிலுள்ள இடையிலுள்ள வித்தியாசம் ஈமான் ஆகும் என்ற எண்ணக்கருவிற்கு சார்பாக கருத்துரைக்க.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு**

''உன்னிடம் வெட்கம் இல்லையென்றால் நீ விரும்பியதை செய்'' என்ற ஹதீஸ் ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து பெற்றோருடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறையைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 5.1 : முஹம்மத்(ஸல்) அவர்களின் மதீனாக் கால வாழ்வின் முன்மாதிரிகளை விளங்கிக் கடைப்பிடிப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- முஹம்மத் (ஸல்) அவர்களிடம் வாழ்வின் எல்லாத்துறைகளுக்குமான முன்மாதிரிகள் உண்டு என்பதை விளக்கி உரையாற்றுவார்.
- மதீனாவில் முஹம்மத் (ஸல்) அவர்கள் முன்மாதிரியான ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காக எடுத்த முயற்சிகளைச் சொல்லிக் காட்டுவார்.
- மதீனா சமூகத்தை ஆற்றுப்படுத்திய வழிமுறைகளை இனம் கண்டு கூறுவார்.
- மஸ்ஜிதுந் நபவியின் பங்களிப்பை விளங்கி எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- நபி (ஸல்) அவர்களிடம் அழகிய முன்மாதிரி இருக்கின்றது. (அல் அஹ்ஸாப்: 21) என்ற அல்குர்ஆன் வசனத்தை எடுத்துக் காட்டி பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- அதுபற்றி மாணவர்களுடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - அல்லாஹ் மனிதர்களைப் படைத்தான். அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக வேதங்களையும் இறைத்தூதர்களையும் அனுப்பினான். எல்லாத்தூதர்களும் மக்களுக்கு முன்மாதிரியாகவே நடந்துகொண்டார்கள். அவ்வாறே நபி (ஸல்) அவர்களும் மனிதர்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொண்டார்கள். அவர்களது மக்கா வாழ்க்கைப்பகுதி போலவே மதீனா வாழ்க்கைப் பகுதியும் முன்மாதிரியாக அமைந்தது.
    - நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் மூலம் மதீனாவை வாழிடமாக அமைத்துக் கொண்டார்கள்.
    - மஸ்ஜிதை உருவாக்கி அதன்மூலம் சமூகத்தை கட்டி எழுப்பினார்கள்.
    - அதன் பின்னர் ஆட்சிமுறை ஒன்றை உருவாக்கினார்கள்.
    - சமூக பாதுகாப்புக்காக உடன்படிக்கைகளை மேற்கொண்டார்கள்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவையும் குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
  - மக்காவில் தனிநபர்களை உருவாக்கிய நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் முன்மாதிரி சமூகத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார்கள்.
  - மஸ்ஜிதை நிறுவி அதனை சமூகமையமாக வளர்த்தார்கள்.
  - மக்கத்து முஹாஜிர்களையும், மதீனத்து அன்ஸாரிகளையும் உஹ்வா அமைப்பில் சமநிலைப்படுத்தினார்கள்.
  - யூதர்களுடன் உடன்படிக்கை மூலம் உடன்பாட்டுக்கு வந்தார்கள்.
  - பாதுகாப்பு, சமூக உறுதிப்பாடு என்பவற்றுக்கான அரசை உருவாக்கினார்கள்.
  - போரிட வேண்டிய நிலை ஏற்பட்ட போது உடன்படிக்கைகள் மூலமும், போர் தர்மங்கள் மூலமும் சமநிலை பேணினார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜித் மூலமாக ஒரு சமூகத்தை எவ்வாறு கட்டியெழுப்பினார்கள் என்பதைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-2** முஹாஜிர்களையும் அன்ஸாரிகளையும் உஹ்வா- சகோதரத்துவ அமைப்பில் வாழ வழி செய்த காரணங்களைக் கலந்துரையாடிப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-3** யூதர்களுடன் உன்படிக்கை செய்து கொண்டதற்கான காரணங்களைக் கலந்துரையாடிப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-4** நபி (ஸல்) அவர்கள் போதித்த யுத்த தர்மங்களைக் கண்டறிந்து கலந்துரையாடி அட்டவணைப்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

தமது குடும்பம் அல்லாத ஏனைய குடும்பங்களுடன் எவ்வாறு சுமுகமாய் வாழ வேண்டும் என்பதை பெற்றோருடன் கலந்துரையாட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறையைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2 : உம்மஹாதுல் மு.ஃமினீன்களின் வாழ்வுமுறையை அறிந்து கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- அன்னை ஹப்ஸா (ரழி) அன்னை உம்மு ஸலமா (ரழி) ஆகியோரின் குடும்பப் பின்னனியைக் கூறுவார்.
- நபி (ஸல்) அவர்களை மணமுடிக்க முன் அவர்கள் இருவரினதும் மணவாழ்வு பற்றி எழுதிக் காட்டுவார்.
- இரு அன்னையரும் நபி (ஸல்) அவர்களை மணமுடித்த பின்னணியைச் சொல்லிக் காட்டுவார்.
- இரு அன்னையர்களதும் முன்மாதிரிகளைப் பின்பற்றி ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- பத்ர், உஹத் போர்க்களங்களில் ஸஹாபாக்கள் பலர் ஷஹீதான பின்னணியை எடுத்துக்காட்டிப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- அதுபற்றி மாணவர்களுடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஹப்ஸா (ரழி) அவர்களின் குடும்பப் பின்னணியை எடுத்துக் கூறுங்கள்.
  - உம்மு ஸலமா (ரழி) அவர்களின் குடும்பப் பின்னணியை எடுத்துக் கூறுங்கள்.
  - இருவரதும் முதற்கணவர், பிள்ளைகள் ஆகியோரை அறிமுகப்படுத்தி அவர்கள் ஷஹீதான பின்னணியை எடுத்துக் கூறுங்கள்.
  - இருவரையும் நபி (ஸல்) அவர்கள் மறுமணம் செய்த பின்னணியை விளக்குங்கள்.
  - இருவரதும் வாழ்வில் காணப்பட்ட நலன்களையும் முன்மாதிரிகளையும் எடுத்துக் காட்டுங்கள்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவையும் குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - ஹப்ஸா (ரழி) அவர்கள், அக்காலத்தில் எழுதவாசிக்கக் கற்றிருந்தார்.
    - அவரது முதற் கணவர், ஹானிஸ் பின் ஹதபா ஸஹ்மி (ரழி) ஆவார்.
    - இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதால் அடைந்த இன்னல்களை தவிர்த்துக் கொள்ள இருவரும் அபீசீனியாவுக்கும், மதீனாவுக்கும் ஹிஜ்ரத் சென்றனர்.
    - பத்ருப் போரில் கணவனை இழந்த ஹப்ஸா (ரழி) அவர்கள் ஹிஜ்ரி 3 இல் நபி (ஸல்) அவர்களை மறுமணம் செய்தார்கள்.
    - அபூபக்ர் (ரழி) அவர்கள் காலத்தில் தொகுக்கப்பட்ட குர்ஆன் பிரதி இவரிடமே பாதுகாப்பாக வைக்கப்பட்டது.
    - ஹப்ஸா (ரழி) அவர்கள் தமது 63ஆவது வயதில் வபாத்தானார்கள்.
    - உம்மு ஸலமா (ரழி) அவர்கள் கல்வித் தேர்ச்சியும் புத்திகூர்மையும் உடையவர்.
    - அவரது முதற்கணவர் அபு ஸலமா மக்ஸூமி (ரழி) அவர்கள் பிரபல கோத்திரத்தைச் சேர்ந்தவர்.
    - இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமையால் ஏற்பட்ட கஷ்டங்களைத் தவிர்ப்பதற்காக இருவரும் அபீசீனிய, மதீனா ஹிஜ்ரத்களில் கலந்து கொண்டனர்.
    - உஹதுப் போரில் காயப்பட்டு அதன் தாக்கத்தால் கணவர் வபாத்தான போது, கணவனின் பிரார்த்தனையின் பயனாக நபி (ஸல்) அவர்களால் மணமுடிக்கப்பட்டார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

F O -1 ஹப்ஸா (ரழி) உம்முஸலமா (ரழி) ஆகிய இருவரதும் குடும்பப்ப்பின்னணியைத் தேடிப் பெற்றுக் கலந்துரையாடி அவற்றின் ஒருமைப்பாட்டையும் வேறுபாட்டையும் எடுத்துக்காட்டுங்கள்.

**குழு-2** ஹப்ஸா (ரழி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் மணமுடித்த பின்னணியையும் உம்மு ஸலமா (ரழி) அவர்களை மணமுடித்த பின்னணியையும் கலந்துரையாடி ஒப்பிட்டு எழுதுங்கள்.

**குழு-3** ஹப்ஸா (ரழி), உம்முஸலமா (ரழி) இருவரதும் முன்னைய கணவர்கள் பற்றி தேடியறிந்து அவர்களிடையே காணப்பட்ட ஒருமைப்பாட்டையும், வேறுபாட்டையும் எடுத்துக்காட்டுங்கள்.

**குழு-4** ஹப்ஸா (ரழி), உம்முஸலமா (ரழி) ஆகியோரின் திறமைகளையும், பங்களிப்புக்களையும் தொகுத்து எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

அன்னை ஹப்ஸா (ரழி) அன்னை உம்மு ஸலமா (ரழி) ஆகியோரின் பண்புகள் குடும்பத்தில் பின்பற்றப்படும் முறையினைத் தொகுத்து எழுதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 :** **நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறையைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.3 :** **அஹ்லு பைத்களின் வாழ்வுமுறையை அறிந்து கூறுவார்.**

**பாடவேளை :** **2**

**கற்றல் பேறுகள்:**

- ஹஸன், ஹுஸைன் (ரழி) ஆகிய இருவரும் நபி (ஸல்) அவர்களின் நேசத்திற்குரிய பேரர்களாக இருந்தார்கள் என்பதனை எடுத்துக் காட்டுவார்.
- ஹஸன், ஹுஸைன் (ரழி) ஆகிய இருவரதும் வாழ்க்கை ஓட்டத்தை எடுத்துக் காட்டுவார்.
- இருவரதும் வபாத் துயரமாக அமைந்த நிகழ்வைச் சொல்லிக் காட்டுவார்.
- இருவரதும் முன்மாதிரிகளை தொகுத்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**
- ''நான் இவ்விருவரையும் நேசிக்கிறேன். நீங்களும் நேசிப்பீர்களாக'' என்ற நபிமொழியை எடுத்துக் கூறி பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- அது பற்றி மாணவர்களுடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - அலி (ரழி) - பாத்திரமா (ரழி) தம்பதிகளின் முதல் இரு பிள்ளைகள் ஹஸன் (ரழி), ஹுஸைன் (ரழி) ஆகியோர் ஆவார்.
    - ஹஸன் (ரழி) அவர்கள் ஹிஜ்ரி 3 இலும், ஹுஸைன் (ரழி) அவர்கள் ஹிஜ்ரி 4 இலும் மதீனாவில் பிறந்தார்கள். ஹஸன் (ரழி), ஹிஜ்ரி 49 இல், 46 ஆறாவது வயதில் மதீனாவிலும் ஹுஸைன் (ரழி) ஹிஜ்ரி 61 இல் 56 ஆவது வயதில் கர்பலாவிலும் (கூபா) வபாத்தானார்கள். ஹஸன் (ரழி) நஞ்சூட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். ஹுஸைன் (ரழி) கர்பலாப் போரில் கொலை செய்யப்பட்டார்கள்.
    - இவர்கள் இருவரையும், ''எனக்குக் கிடைத்த ரைஹான் மலர்கள்'' என்றும் ''சுவன வாலிபர்களின் தலைவர்கள்'' எனவும் நபி (ஸல்) அவர்கள் பாராட்டினார்கள்.
    - இருவரிடமும் சிறந்த பண்புகள் காணப்பட்டன. ஹஸன் (ரழி) அவர்களிடம் தயாளகுணமும் பொறுமையும் நிறைந்து காணப்பட்டன. இதனால் தான் ''எனது இந்த மகன் மூலமாக முஸ்லிம்களின் இரு பிரிவுகளுக்கு இடையில் ஒற்றுமை ஏற்படும்'' என ஹஸன் (ரழி) அவர்களைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் நன்மாராயனம் கூறினார்கள். அவர்கள் ஆட்சியை விட்டுக் கொடுத்து முஸ்லிம்களை ஒன்றுபட வைத்தார்கள்.
    - ஹுஸைன் (ரழி) அவர்களிடம் அமைதி, எளிமை, துணிவு, சத்தியம் முதலிய பண்புகள் மிகைத்துக் காணப்பட்டன.

**படி 2 :**
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவையும் குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.

- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றை சமர்ப்பிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
  - நபி (ஸல்) அவர்களின் நேசத்திற்கு உரிய இளைய மகள் பாத்திமா (ரழி) அவர்களின் முதலிரு புதல்வர்களே ஹஸன் (ரழி), ஹுஸைன் (ரழி) ஆவார்.
  - இவர்களுக்கு நபி (ஸல்) அவர்களே பெயரிட்டு, பிறந்த குழந்தைகளுக்குச் செய்யும் கடமைகளையும் செய்தார்கள்.
  - சிறுவர்களான இவர்களை நபி (ஸல்) அவர்கள் மிக நேசித்தார்கள். அவர்கள் மூலம் சிறுவர்களுக்கு எவ்வாறு இரக்கம் காட்ட வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டினார்கள்.
  - இவர்களுக்கான அறிவையும், பண்பாட்டையும் நபியவர்களே போதித்தார்கள்.
  - நபி (ஸல்) அவர்கள் இவ்விருவரதும் சிறுவயதிலேயே மறைந்ததால் தாயும், தந்தையும் ஏனைய பயிற்சிகளை வழங்கினார்கள்.
  - இவர்களில் சிறந்த முன்மாதிரிகள் காணப்படுகின்றன.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 ஹஸன், ஹுஸைன் (ரழி) ஆகிய இருவரதும் மதிநுட்பத்தை வெளிக்காட்டும் சம்பவங்களைத் தேடிக் கலந்துரையாடி அதில் ஒன்றை எழுதுங்கள்.

குழு-2 ஹஸன், ஹுஸைன் (ரழி) ஆகிய இருவரதும் நற்பண்புகளை எடுத்துக்காட்டும் சம்பவங்களைத் தேடிக் கலந்துரையாடி அதில் ஒன்றை எழுதுங்கள்.

குழு-3 ஹஸன், ஹுஸைன் (ரழி) ஆகிய இருவரை நபி (ஸல்) அவர்கள் விசேடமாக நேசித்தமைக்கான காரணங்களைக் கலந்துரையாடி கண்டறிந்து பட்டியற்படுத்துங்கள்.

குழு-4 ஹஸன், ஹுஸைன் (ரழி) ஆகிய இருவரையும் பாராட்டிக் கூறப்பட்ட ஹதீஸ்கள் நான்கையும், முன்னோர்கள் பாராட்டுக்கள் நான்கையும் கண்டறிந்து கலந்தாலோசித்து அவற்றுள் ஐந்தை மாத்திரம் தெரிந்து எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

நபி (ஸல்) அவர்கள் தமது பேரர்களுக்குக் காட்டிய அன்போடு வீட்டில் சிறுவர்களுக்குக் காட்டப்படும் அன்பை ஒப்பிட்டுப் பார்த்து நெறிப்படுத்த வேண்டிய அம்சங்களை பட்டியற்படுத்தி வருமாறு வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறையைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.3 : ஸஹாபாக்களின் முன்மாதிரிகளை எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- பிலால் (ரழி), அம்மார் (ரழி) ஆகியோரின் மூதாதையரைக் குறிப்பிடுவார்.
- இருவரினதும் அடிமை வாழ்வை விளக்கிக் கூறுவார்.
- இருவரும் இஸ்லாத்திற்காக பட்ட துன்பங்களை அறிந்து எழுதுவார்.
- இருவரும் நபி (ஸல்)அவர்களின் ஆசிர்வாதத்திற்கு உட்பட்டவர்கள் என்பதை எடுத்துக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- பெரியார் பிலாலின் தியாக வாழ்வை ... என்ற பாடலை ஒலிக்கச் செய்து அது பற்றி மாணவர்களது கருத்துக்களை வினவி பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - பிலால் (ரழி), அம்மார் (ரழி) ஆகியோரின் குடும்பப் பின்னணியை எடுத்துக் கூறுங்கள்.
  - இருவரதும் அடிமை வாழ்வைப் பற்றி விளக்கமளியுங்கள்.
  - இருவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதால் பெற்ற தண்டனைகளைச் சுட்டிக்காட்டுங்கள்.
  - அவர்களது ஈமானிய உறுதிப்பாட்டையும் அதன் மூலம் அவர்கள் அடைந்த உயர்நிலையையும் எடுத்துக் காட்டி விளக்குங்கள்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவையும் குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
  - பிலால் (ரழி) அவர்கள் ஹபஷாவை தாயகமாகக் கொண்டவர். அம்மார் (ரழி) அவர்கள் யமனைத் தாயகமாகக் கொண்டவர்.

- பிலால் (ரழி) உமையா பின் கலப் என்பாரின் அடிமையாக இருந்தார்.
- பிலால் (ரழி) இஸ்லாத்தை ஏற்றமைக்காக எசமான், உச்சி வெயிலில் படுக்க வைத்து, அசைய முடியாதவாறு நெஞ்சில் பாராங்கல்லை வைத்து இஸ்லாத்தை விட்டு நீங்க வேண்டும் அல்லது சாக வேண்டுமென வேதனைப்படுத்துவார். அப்போது அவன் ஒருவன் என்றே கூறிக் கொண்டிருப்பார்.
- பிலால் (ரழி) அவர்கள் வாழ்ந்த பகுதியில் அபூபக்ர் (ரழி) அவர்களின் வீடொன்று இருந்தது. நபி (ஸல்) அவர்கள் அவரைச் சந்திப்பதற்காக அங்கு வந்து செல்வார்கள். அபூபக்ர் (ரழி) அவர்களின் பிரசாரம் காரணமாகவே பிலால் (ரழி) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அதற்காக எஜமான் கொடுக்கும் வேதனைகளைச் சகிக்காமல் அதற்காக அபூபக்ர் (ரழி) அவர்களே பிலால் (ரழி) அவர்களை விலை கொடுத்து வாங்கி விடுவித்தார்கள்.
- பிலால் (ரழி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் தம்முடன் நிறுத்திக் கொண்டதோடு முதல் முஅஸ்ஸினாகவும் அமர்த்திக் கௌரவித்தார்கள். சுவர்க்கவாசி என ஆசிர்வதித்தார்கள். ‘தொழுகைக்கு அழைக்கும் உமது ஒலியைக் கொண்டு எமக்கு உயிரூட்டும்’ என்பார்கள்.
- அம்மார் (ரழி) அவர்களின் தாய் தந்தையர்(யாஸிர்-சுமையா) அபூஹுதைபா மக்ஸூமியின் அடிமையாக இருந்தனர். அம்மார் (ரழி) இஸ்லாத்தை ஏற்றமைக்காக, உருக்குச் சட்டை அணிவிக்கப்பட்டு எரியும் தணலில் கிடத்தப்படுவார். அவர் அலறும் போது, “இப்றாஹிம் (அலை) அவர்களுக்குப் போன்று சாந்தியளிக்கும் குளிராக மாறிவிடு” என நபி (ஸல்) அவர்கள் பிரார்த்திப்பார்கள்.
- அம்மார் (ரழி) அவர்கள் தாருல் அர்க்கம் பகுதிக்குச் சென்ற போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் மூலமாக அவரது தாயும் தந்தையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.
- அம்மார் (ரழி) அவர்கள் வற்புறுத்தப்பட்டு நபி (ஸல்) அவர்கள் பற்றி அவதூறு சொல்ல வைத்தபோது, அவர் முர்ததாகி விட்டதாக மக்கள் கருதினர். அவ்வேளை, அவர் முர்ததாகமாட்டார். அவர் மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பார், மக்கள் அவரை நரகின் பக்கம் அழைக்கின்றனர். அவர் தையிபுல் முதய்யிப் - நல்லவருள் நல்லவர். அவர் சத்தியத்தின் பக்கம் இருப்பார் என நபியவர்கள் பாராட்டினார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** பிலால் (ரழி), அம்மார் (ரழி) அவர்கள் அடிமை வாழ்வில் பட்ட இன்னல்களை தரவிருத்தி உள்ளீடுகள் மூலம் தேடிப் பெற்றுக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-2** பிலால் (ரழி), அம்மார் (ரழி) அவர்கள் இருவரும் இஸ்லாத்தை ஏற்ற பின்னணியையும் அதனால் அனுபவித்த துன்பங்களையும் மையப்படுத்தி ஒரு சொற்பொழிவை தயாரியுங்கள்.

**குழு-3** பிலால் (ரழி), அம்மார் (ரழி) ஆகிய இருவரும் நபி (ஸல்) அவர்களின் ஆசிர்வாதத்திற்கு உட்படுவதற்கான காரணங்களைக் கலந்தாலோசித்து எழுதுங்கள்.

**குழு-4** பிலால் (ரழி) அம்மார் (ரழி) ஆகிய இருவரிலும் காணப்பட்ட நல்லம்சங்களை கண்டறிந்து பட்டியற்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு -**

நீங்கள் படித்த இருவர்களையும் பற்றி வீட்டில் கலந்துரையாடி மேலதிக தகவல்களை எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறையைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.4 : நபிமார்களின் முன்மாதிரிகளை எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- நபி நூஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையை அறிந்து குறிப்பிடுவார்.
- நபி நூஹ் (அலை) அவர்களின் த.்.வா பற்றி விளக்கி எழுதுவார்.
- நபி நூஹ் (அலை) அவர்கள் வாழ்வில் எதிர்கொண்ட சவால்களைப் பட்டியல்படுத்துவார்.
- நபி நூஹ் (அலை) அவர்களது வாழ்வின் முன்மாதிரிகளைப் பின்பற்றுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**
- நபி நூஹ் (அலை) அவர்கள் கப்பல் கட்டிய வரலாற்றை நினைவுபடுத்துங்கள். கப்பல் கட்டி, விசுவாசிகளையும் உயிரின சோடிகளையும் அதில் ஏற்றி வெள்ளத்திலிருந்து காப்பாற்றிய நிகழ்வைக் கதையாகக் கூறுங்கள்.
- இந்நிகழ்வு தொடர்பாக மாணவர்களுடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
    - ஆதம் (அலை) அவர்களுக்குப் பின் மனித சமுதாயத்திற்கு பல்வேறு தூதர்கள் அனுப்பப்பட்டனர்.
    - அல்லாஹ்வின் வழிகாட்டல் நூஹ் (அலை) அவர்கள் மூலம் கிடைத்தது.
    - நபி நூஹ் (அலை) அவர்களது வழிகாட்டலைப் புறக்கணித்து நடந்தவர்களை அல்லாஹ் வெள்ளத்தில் மூழ்கடிக்கச் செய்து அழித்தான்.

**படி 2 :**
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவையும் குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3 :**
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - ஆதம் (அலை) அவர்களின் மூன்றாவது சந்ததியில் சில நல்ல மனிதர்கள் தோன்றினார்கள். அவர்கள் இறந்த பின்னர் அவர்களுக்காக சிலைகளை எழுப்பி அவர்களை மக்கள் கௌரவித்தார்கள்.
    - காலப்போக்கில் அச்சிலைகள் வணக்கத்துக்குரியவையாக மாறின.
    - இக்காலத்தில் நூஹ் (அலை) அவர்களை அல்லாஹ் நபியாக அனுப்பி வைத்தான். அவர்கள் சிலை வணக்கத்துக்கு எதிராகப் பிரசாரம் செய்தார்கள். தௌஹீதைப் போதித்தார்கள்.
    - ஆனால் மக்களோ, காதுகளை அடைத்தும் முகங்களை மூடியும் நபி நூஹ் (அலை) அவர்களது பிரசாரத்தை உதாசீனம் செய்தனர்.
    - தான் அல்லாஹ்வின் தூதர் என்றும் அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும்மென்றும் நூஹ் (அலை) அவர்கள் செய்த போதனைகளை ஏற்காது அவர்களை மக்கள் இம்சைப்படுத்தினர்.
    - நூஹ் (அலை) அவர்கள் தமது நிலை பற்றி அல்லாஹ்விடம் முறையிட்ட போது, அல்லாஹ் ஒரு கப்பலைக் கட்டுமாறு பணித்தான்.
    - தரையில் கப்பலைக் கட்டுவதைப் பார்த்த மக்கள் நூஹ் (அலை) அவர்களைப் பரிகாசம் செய்தார்கள்.
    - கப்பலில் விசுவாசிகளுடன் உயிர்ப்பிராணிகள் இவ்விரு சோடிகளும் ஏற்றப்பட்டன.
    - அடைமழை பெய்தது: வெள்ளம் பெருகியது: எதிரிகள் முற்றாக அழிக்கப்பட்டனர்: இவ்வெள்ளத்தில் நூஹ் (அலை) அவர்களது மகன் கூட இஸ்லாத்தை ஏற்காததால் அழிக்கப்பட்டான்.
    - கப்பல் ஒரு மலையில் தரை தட்டியது: வெள்ளம் வற்றிய பின் மக்கள் தரையிறங்கி வாழ ஆரம்பித்தனர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்கு பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** நூஹ் (அலை) அவர்களது த.ஃவாவின் முக்கிய அம்சங்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-2** நூஹ் (அலை) அவர்கள் தனது பிரச்சாரத்தின் போது எதிர்கொண்ட சவால்களை திரட்டுங்கள்.

**குழு-3** நூஹ் (அலை) அவர்களது காலத்தில் ஏற்பட்ட இந்த வெள்ளப் பெருக்கை உள்ளடக்கி ஒரு கதையை எழுதுங்கள்.

**குழு-3** நூஹ் (அலை) அவர்களது காலத்தில் ஏற்பட்ட இந்த வெள்ளப் பெருக்கை ஒரு சித்திரத்தில் காட்சிப்படுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

நபி நூஹ் (அலை) அவர்களது வரலாற்றைக் கூறும் ஸூரா நூஹின் மொழிபெயர்ப்பை குடும்பத்தவர்களோடு இருந்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 : வீட்டினுள் கடைப்பிடிக்க வேண்டிய அவ்ரத்தைப் பேணுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- இஸ்லாமிய கண்ணோட்டத்தில் அவ்ரத் என்றால் யாது என்பதை விளங்கிக் கூறுவார்.
- ஆண் பெண் இரு பாலாரினதும் அவ்ரத்தை வரையறை செய்து கூறுவார்.
- வீட்டிற்குள்ளும் அவ்ரத்தைப் பேணுவதன் முக்கியத்துவத்தை விளங்கி பின்பற்றி நடப்பார்.
- அவ்ரத்தைப் பேணி உடை அணிவதால் ஏற்படும் கண்ணியத்தையும் உள திருப்தியையும் எடுத்துக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1** :
- "ஆதமுடைய மக்களே! உங்களுடைய மானத்தை மறைக்கக் கூடியதும் (உங்களை) அலங்கரிக்கக் கூடியதுமான ஆடைகளை நிச்சயமாக நாம் உங்களுக்கு அருளியுள்ளோம். எனினும், தக்வா(பயபக்தி) எனும் ஆடையே மேலானது. இது அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் ஒன்றாகும். (இதன் மூலம்) அவர்கள் நல்லுணர்ச்சி பெறுவார்களாக"

  (அல் அ.்.ராப் :26) என்ற ஆயத்தை ஓதி பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
- அதுபற்றி மாணவர்களுடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்:
  - அவ்ரத் என்பது கட்டாயம் மறைக்க வேண்டிய பகுதிகளைக் குறிக்கும்
  - அவ்ரத்தை பேணுவதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியான வரையறைகள் உண்டு.
  - ஆடை அணிவதன் மூலம் மனிதன் மானத்தை மறைத்து கண்ணியமான தோற்றத்தையும் ஆளுமையையும் வெளிப்படுத்தி வாழ்வான்.

**படி 2** :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவையும் குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3** :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - மனித வாழ்க்கையோடு இரண்டறக் கலந்த ஒன்றே ஆடையாகும். இது எமக்கு வழங்கப்பட்ட அருளும் கண்ணியமும் ஆகும்.
    - ஆண்களினதும் பெண்களினதும் மான உணர்வுகளுக்கேற்பவே அவர்களின் ஆடை அணிகள் வரையறைக்குட்படுத்தப்பட்டுள்ளன.
    - மானத்தை மறைப்பது மனிதனின் இயல்போடு இணைந்த ஒரு போக்காகும். இந்த உணர்வு இல்லாமல் போகும் போது மனிதனும் மிருகமாகின்றான்.
    - ஒருவர் அணியும் ஆடை இஸ்லாமிய பண்பாடுடையதாக அமையும் போது அவருக்கு கண்ணியம் கிடைக்கும்.
    - ஆண்கள் தொப்புளின் மேற்பகுதி முதல் முழங்காலின் கீழ்ப்பகுதி வரை தமது உடலின் அந்தரங்கத்தை அவசியம் மறைத்தாக வேண்டும். ஏனைய பகுதிகளை மறைத்துக் கொள்வது அவனது கௌரவ உணர்வைப் பொறுத்தது.
    - பெண் முகத்தையும் மணிக்கட்டுக்குக் கீழான இரு கைகளையும் தவிர உடலின் அனைத்துப் பகுதிகளையும் மறைக்கும் போது நாணம், அச்சம், தர்மசங்கடம் போன்றவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதோடு தனக்குள் ஒரு சௌகரியத்தையும் உணர்கிறாள். அவள் தனது பார்வையையும் தாழ்த்திக் கொள்ளும் போது அவளது பாதுகாப்பு முழுமை பெறுகிறது.
    - அவ்வாறே ஆண்களும் தம் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளும் போது பாவங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுகின்றனர்.

      (அந்நூர் : 30)
    - பெண்களின் ஆடை சில நிபந்தனைகளை உள்ளடக்குகிறது.
    - பெண்கள் வீட்டில் இருக்கும்போது தமது அவ்ரத்தை பேண வேண்டும். (அந்நூர் : 31)

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

F O -1 பின்வரும் இலக்கங்களுடைய அல்குர்ஆன் வசனங்களை தர்ஜமதுல் குர்ஆனில் தேடி எழுதிக் கொள்ளுங்கள். பின்னர் அந்த வசனங்கள் தரும் முக்கிய போதனைகளைக் கலந்துரையாடிப் பட்டியற் படுத்துங்கள். (அந்நூர்: 27-31)

**குழு-2** அவ்ரத் பற்றி விளக்கப்பட்டுள்ள இரண்டு ஹதீஸ்களைத் தேடிப் பெற்று அவை தரும் போதனைகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு-3** இஸ்லாம் கூறும் வரையறைகளைப் பேணி ஆடை அணிவதால் கிடைக்கும் பயன்களைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு-4** இஸ்லாமிய முறைப்படி ஆடை அணியாதவர்களால் எழுந்துள்ள ஒழுக்க வீழ்ச்சிகள் சமூகச் சீர்கேடுகள் பத்தினைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு-**

அவ்ரத்தைப் பேணுவதில் வீட்டில் கடைப்பிடிக்கும் ஒழுக்கங்களை பெற்றோருடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாக கடைபிடித்து வருவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.2 : வீட்டினுள் பேண வேண்டிய அவ்ரத்தைப் பேணுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- வீட்டிற்குரிய அவ்ரத்தை விளங்கி ஒழுகுவார்.
- வீட்டினுள் ஒழுக்க விழுமியங்களைப் பேணிக் கடைப்பிடித்து ஒழுகுவார்.
- வீட்டுக்குள் ஆன்மீகச் சூழலைப் பேண வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து செயற்படுவார்.
- வீட்டுச் சூழலில் சுத்தத்தைப் பேணவேண்டும் என்ற உணர்வைப் பெற்று செயற்படுவார்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- ''நீங்கள் எந்த வீட்டில் நுழைந்த போதிலும் அல்லாஹ்வால் உங்களுக்கு கற்பிக்கப்பட்ட மிக்க பாக்கியமுள்ள பரிசுத்தமான (அஸ்ஸலாமு அலைக்கும் என்னும்) வாக்கியத்தை நீங்கள் உங்களுக்கு ஒருவருக்கொருவர் கூறிக்கொள்ளுங்கள்'' (அந்நூர் : 61)
- வீட்டில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி மாணவர்களிடம் வினவிக் கருத்துப் பரிமாறிக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - வீட்டின் அறைகள், பாவணைப் பொருட்கள் போன்ற அனைத்திற்கும் அவ்ரத் உண்டு.
  - வெற்றிகரமான குடும்ப வாழ்வின் அடிப்படை வீட்டுச் சூழலாகும். வீட்டுச் சூழல் பேணப்படும் ஒழுங்குகளே சமூகத்திலும் பிரதிபலிக்கின்றன.
  - வீட்டினுள் நல்ல பழக்க வழக்கங்கள் உருவாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்
  - வீட்டுச் சூழலில் நாம் முன்மாதிரியாக செயற்படும் போது ஏனைய இடங்களிலும் அவற்றைக் கடைப்பிடிப்பதற்கான உந்துதலைப் பெறமுடியும்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்குமான குழுத்தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- தேவையான நூல்கள், கடதாசிகள், நிறப் பேனாக்கள் என்பவற்றை வழங்குங்கள்.

- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு, முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
  - வீடு, குடும்பம் என்பன மனிதனுக்கு அமைதியையும் நிம்மதியையும் கொடுக்கின்ற களமாக அமைய வேண்டும்.
  - வீட்டினுள் நுழையமுன் அனுமதி பெற வேண்டும் அதற்காக ஸலாம் கூற வேண்டும், பதில் ஸலாம் கிடைத்தால் மட்டுமே உள்ளே நுழைய வேண்டும்.
  - வீட்டினுள் நுழையும்போது “பிஸ்மில்லாஹி வலஜனா வபிமிஸ்லாஹி கரஜ்னா வலல்லாஹி ரப்பனா தவக்கல்னா'' என்று ஓத வேண்டும்.
  - பிறா் வீட்டில் நுழைய அனுமதி கேட்கும்போது வாசலுக்கு முன்னால் நிற்காமல் அதன் வலது அல்லது இடது பக்கத்தில் நிற்க வேண்டும். இதுவே நபி ஸல் அவர்களின் ஸுன்னாவாக இருந்தது.
  - அனுமதி கேட்கும்போது தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும். அனுமதி கிடைக்கப்பெறாவிட்டால் திரும்பி சென்றுவிடுவது சிறப்பானதாகும்.
  - குடும்பத்தில் சக உறுப்பினர்களுடன் நலினமாகவும் இங்கிதமாகவும் நடந்துகொள்வதுடன் பொய், புறம், கோள், பொறாமை போன்ற தீய குணங்களை விட்டும் தவிர்ந்துகொள்ளல் வேண்டும்.
  - எப்போதும் வீட்டை சுத்தமாகவும், அழகாகவும் ஒழுங்காகவும் வைத்திருத்தல். வீட்டுப் பாவனைப் பொருட்கள் ஒவ்வொன்றையும் அவற்றுக்குரிய இடத்தில் வைத்தல்.
  - படுக்கையறை குளியறை சமையலறை என்பவற்றைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருத்தல்
  - அதிகாலையில் எழும்புதல், நேரத்திற்குத் தூங்குதல். “எனது சமூகத்தில் காலையில் துயில் எழுவதில் பரகத் இருக்கிறது''.

- வீட்டில் அல்குர்ஆன் ஓதுதல், நபிலான தொழுகைகளை நிறைவேற்றல், நாளாந்த திக்ர் அவ்ராதுகளை தனியாகவும் கூட்டாகவும் ஓதுதல், பிரயோசனமான நூல்கள், சஞ்சிகைகள், இறுவட்டுக்களை பார்வையிடல் முதலாவை சிறப்பான காரியங்களாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு -1 வீட்டினுள் நுழையும் போது ஓதும் துஆவினை அறபியில் பொருளுடன் எழுதி காட்சிப்படுதுங்கள்

குழு -2 வீட்டுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்காக நீங்கள் கூறும் ஆலோசனைகளைப் பட்டியல்படுத்துங்கள்

குழு -3 வீட்டில் உள்ள சக உறவினர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளை எழுதுங்கள்

குழு -4 வீட்டுச் சூழலில் நாம் செய்யும் ஆன்மீக விடயங்களைப் பட்டியல்படுத்துங்கள்

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு:**

வீட்டினுள் அவ்ரத்தைப் பேணி நடப்பதற்கான வழிமுறைகள் பற்றி பெற்றோருடன் கலந்துரையாடி திட்டமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 7.0 : ஒவ்வொரு அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டௌன்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1 : பொதுச் சொத்துக்களைப் பேணிப் பாதுகாத்து வருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- பொதுச் சொத்து என்பதை வரையறுத்துக் கூறுவார்.
- பொதுச் சொத்துக்கள் சிலவற்றை இனம் காட்டுவார்.
- பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் முறையினைச் சொல்லிக் காட்டுவார்.
- பொதுச் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி 1 :
- பொதுச் சொத்து என்றால் என்ன என்ற வினாவுடன் பாடப்பிரவேசத்தை ஆரம்பியுங்கள்.
- பொதுச் சொத்துக்கள் தொடர்பாக மாணவர்களுடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - சொத்துக்கள் தனியார் சொத்து, பொதுச் சொத்து என இரண்டாக நோக்கப்படுகின்றன.
  - தனியார் சொத்தை அவரவர் கண்காணிப்பார். பொதுச் சொத்தை ஒவ்வொருவரும் கண்காணிப்பர். அரசாங்கம் அல்லது நிறுவனங்கள் அவற்றை விஷேடமாகக் கண்காணிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது.
  - பொதுச் சொத்தைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. அவற்றைப் பயன்படுத்தும்போது மிகவும் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும்.
  - பொதுச் சொத்தைத் துஷ்பிரயோகம் செய்யும்போது மக்களே கஷ்டத்துக்கும், நஷ்டத்துக்கும் உட்படுவர்.

படி 2 :
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்
- ஒவ்வொரு குழுவையும் குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி 3 :
- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:
    - பொதுச் சொத்து என்பது, பொதுமக்கள் நலனுக்காக அரசாங்கத்தினாலோ, நிறுவனங்களினாலோ நிர்மாணிக்கப்படுகின்ற, அல்லது இயற்கையில் அமைந்த ஏரி, காடு, கடற்கரை போன்றவற்றைக் குறிக்கும்.
    - சொத்துக்களை பொதுமக்கள் பயனுக்கு விட்டுவிடுவதானது மறுமையில் நிறைவான நன்மைகளைப் பெற்றுத் தரும் ஒரு செயலாகும். இதனை ஸதகதுல் ஜாரியா என்பர்.
    - பொதுக் கிணறுகள், பொது மலசல கூடங்கள், குளி கூடங்கள், மஸ்ஜித்கள், பாதைகள், நிழல் தரும் மரங்கள், தங்குமிடங்கள், இலவச அன்னசாலைகள், மருத்துவமனைகள், பாடசாலைகள், நூலகங்கள் போன்றன அமைக்கப்படுவதன் மூலம் ஸதகதுல் ஜாரியாவிற்கான கூலியைப் பெறலாம்.
    - இவ்வாறானவற்றை அமைத்து பொதுமக்களுக்காக ஒப்படைக்கப்படுவது வக்பு சொத்து எனப்படுகிறது. இவற்றைப் பரிபாலிப்பதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அமர்த்தப்படுவர்.
    - பொதுச் சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்வது பாவமாகும். அவற்றைத் தகர்த்தல், அசுத்தப்படுத்தல், நாசப்படுத்தல், திருடுதல், சொந்தச் சொத்தாக ஆக்கிக் கொள்ளல் போன்றன துஷ்பிரயோகத்தில் அடங்கும்.
    - பொதுச் சொத்துக்களை நமது சொந்த சொத்துக்களைப் போல பராமரிக்க வேண்டும். அல்லாஹ் விசாரிப்பான் என்ற உணர்வோடு அதனைப் பயன்படுத்த வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

**குழு-1** கலந்துரையாடிப் பொதுச் சொத்துக்களின் பட்டியல் ஒன்றைத் தயாரியுங்கள்.

**குழு-2** பொதுச் சொத்துக்கள் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன என்பதை வெளிக்காட்டும் படங்களைத் திரட்டி காட்சிப்படுத்துங்கள்.

**குழு-3** பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பதாதைகள் ஐந்தை தயார்படுத்துங்கள்.

**குழு-4** பொதுச் சொத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஒரு கண்காட்சியை ஒழுங்குபடுத்துங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு-**

சுற்றாடலில் காணப்படும் பொதுச் சொத்துக்களையும் அவை பயன்படுத்தும் முறையையும் பெற்றோருடன் சென்று அவதானித்து அது பற்றி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 7.0 : ஒவ்வொரு அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 7.2 : தேசப்பற்றுடன் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள்:**

- தேசத்தின் மீது பற்றுக் கொள்ள வேண்டும் என்பதை உறுதியோடு ஏற்றுக் கொண்டு செயல்படுவார்.
- அதற்கான நியாயங்களை எடுத்துக் கூறுவார்.
- நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரிகளைச் சுட்டிக்காட்டுவார்.
- தேசப்பற்றின் விளைவுகளை ஆதாரங்களுடன் முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1 :**

- ''மக்காவே, நீ எவ்வளவு சிறந்த தேசம். எனது சமூகம் என்னை இங்கிருந்து விரட்டியடிக்காவிட்டால் நான் உன்னை (மக்காவை) விட்டுச் சென்றிருக்க மாட்டேன்.'' (திர்மிதி)

  என்ற ஹதீஸுடன் பாடத்தில் பிரவேசியுங்கள்.
- அதுபற்றி மாணவர்களுடன் கருத்துப் பரிமாறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்:
  - ஒவ்வொருவருக்கும் தாம் பிறந்த தேசம் தாய் நாடாக அமைகிறது.
  - அதனை நேசிப்பது, பாதுகாப்பது, அதன் நலனுக்காக உழைப்பது தேசப்பற்றின் வெளிப்பாடாகும்.
  - அதன் சுதந்திரத்திற்காக, பாதுகாப்பிற்காக, மகிழ்வோடும் உரிமையோடும் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதற்காக உழைப்பதை இஸ்லாம் வலியுறுத்துகிறது.

**படி 2 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச்செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி 3 :**

- ஒவ்வொரு குழுவும் தாம் கலந்துரையாடியவற்றைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வு செய்யுங்கள்:

- இஸ்லாம் இயற்கை மார்க்கம் என்ற அடிப்படையில் தேசத்தை சார்ந்து நிற்கும் உணர்வை அங்கீகரிக்கின்றது.
- தேசத்தில் பற்றுக் கொள்வது மனித இயல்பூக்கத்தைச் சார்ந்தது. இதில் காபிர், முஸ்லிம் வேறுபாடின்றி அனைவரும் உடன்படுகின்றனர்.
- நபி (ஸல்) அவர்கள் மக்காவில் வாழும் போது மக்காவை நேசித்தார்கள். ஹிஜ்ரத் போகும் போது கூட பிறந்த நாட்டை eþ d j ;J f t i y ggl ! hHf s ; "யா அல்லாஹ் நீ எங்களுக்கு மக்காவை நேசத்துக்குரிய பூமியாக மாற்றியது போல் மதீனாவையும் மாற்றித்தருவாயாக. அல்லது மக்காவை விட பற்றுள்ள பூமியாக மாற்றித்தருவாயாக" (புகாரி)
- தேசத்தைச் சார்ந்து தொழிற்படுவது, சிந்திப்பது, அதன் சுதந்திரத்திற்காக அபிவிருத்திக்காக போராடுவது அல்லாஹ் ஏற்படுத்திய சமூகவியல் நியதிகளாகும். அதனை எக்காலமும் மாற்ற முடியாது.
- மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்ற நபி (ஸல்) அவர்கள் மக்காவில் பஞ்சம் ஏற்பட்ட போது மதீனாவிலிருந்து நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்தார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்:**

குழு-1 தேசப்பற்று என்பதை விளக்கும் வகையில் கலந்துரையாடிப் பத்து வசனங்கள் கொண்ட ஒரு பந்தியை எழுதுங்கள்.

குழு-2 தேசப்பற்று அவசியம் என்பதை உறுதிப்படுத்திக் கலந்துரையாடி பத்து வசனங்கள் எழுதுங்கள்.

குழு-3 தேசப்பற்று அருகி வருவதற்கான அறிகுறிகள் பத்தினை கலந்துரையாடி இனங்கண்டு எழுதுங்கள்.

குழு-4 நபி (ஸல்) அவர்கள் தேசப்பற்றுடன் நடந்து கொண்டார்கள் என்பதற்கான ஆதாரங்கள் ஐந்தினைக் கலந்துரையாடிக் கண்டறிந்து எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு-**

தங்கள் குடும்ப உறுப்பினர்கள் தேசத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்கள் பற்றிக் கலந்துரையாடி அவர்கள் முன்வைத்த கருத்துக்களை எழுத வழிப்படுத்துங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுள்**

- டிமை கடதாசி
- ஃபெலற் பேனாக்கள்
- எழுது கடதாசி
- பென்சில்கள்
- அடிமட்டம்
- றெஜிபோம்
- பிறிஸ்டல் போர்ட்
- ஒலி / ஒளி நாடாக்கள்
- இறுவட்டுக்கள்
- பசை நாடாக்கள்
- இணையத்தளங்கள்

**நூல்கள்**


- தர்ஜமதுல் குர்ஆன் - அப்துல் ஹமீத் பாகவி
- றியாழுஸ் ஸாலிஹீன்- இமாம் நவவி (ரஹ்) தமிழ் மொழி பெயர்ப்பு
- நபி மொழி திரட்டிய நல்லவர்கள் - முஹம்மது முஸ்தபா
- முன்மாதிரி முஸ்லிம் - முஹம்மத் அலி அல் ஹாஷிமி
- அமல்களின் சிறப்பு - மௌலானா ஸகரிய்யா ஸாஹிப் (ரஹ்)
- ஒழுக்க மாண்புகள் - ஷெய்க் அல் கஸ்ஸாலி
- வாழ்க்கைக் கலை - மௌலானா முஹம்மத் யூசுப் இஸ்லாஹி
- அர்ரஹீக் - எஸ். முபாரக் பூரி
- நபிகளாரின் துணைவியர் முஃமின்களின் அன்னையர் - மௌலவி முகம்மத் யூசுப்
- இஸ்லாத்தில் இறை நம்பிக்கை - ஹஸன் ஐயூப்
- குத்பாக்களின் தொகுப்பு - வாமி வெளியீடு
- நாற்பது நபிமொழிகள் - இமாம் நவவி
- நபித் தோழியர் வரலாறு - மௌலவி மஸ்தான் அலி பாகவி
- அல்குர்ஆன் ஓர் அறிமுகம் - ஏ.எல்.பீர் முஹம்மது
- மறுவிலா முழுமதி நபிகள் நாயம் (ஸல்) அவர்கள் - ஜமால்
- முதல் இறைத் தூதர் நூஹ் (அலை) - மௌலவி அப்துர் ரஹ்மான் உமரி
- நபிமார்கள் வரலாறு - வாமி வெளியீடு